ஓம்

ஆனந்த விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

மலர் 4. சென்னை, 1936ஹு ஜூன்மீ 15உ இதழ் 6.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	காங்கிரஸில் பிளவா?	2
2.	காலச் சக்கரம்	5
3.	சூரிய வெப்பத்தின் பலன் (படம்)	8
4.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	9
5.	காதற் கடிதம்	17
6.	"சொர்க்கானுபவம்"	19
7.	மோதிரக் களவு	23
8.	ரேஸ் டிராமா	26
9.	மனோரஞ்சிதம்	30
10.	"பலே! பயல் அகப்பட்டான்!"	33
11.	அதிர்ஷ்ட-லாட்டரி!	37
12.	பார்வதி-பரமேசுவரன்	41
13.	யுத்த தேவதையின் முன்னறிவிப்பு (படம்)	45
14.	உருவப்படத் திறப்புவிழா	46
15.	ஆடல் பாடல்	49

"விகடனி"ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே, தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

காங்கிரஸில் பிளவா?

"காங்கிரஸில் பிளவு ஏற்பட்டு விடப்போகிறது! பிளவு ஏற்பட்டே விட்டது! காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் சமதர்மவாதிகளும் ஒருவரை யொருவர் எப்போதும் மோதிக்கொண்டே இருக்கிறார்கள்! இன்னுங் கொஞ்ச காலத்துக்குள் இச்சிறு பிளவு மிகப் பெரிதாகி அதன் பயனாக, காங்கிரஸுக்குள்ள செல்வாக்கே அழிந்துவிடப் போகிறது" என்றெல்லாம், காங்கிரஸ் விரோதிகள் சாடு கட்டிவிட்டுப் புரளி செய்துகொண்டு வருகிறார்கள். இவர்கள் வேண்டுமானால், இவ்வாறு நினைத்துக் கொண்டு மனதிருப்தி யடைந்து கொண்டிருக்கலாமே யொழிய, உண்மையில் காங்கிரஸில் யாதொரு விதமான பிளவுமில்லை. இது விஷய மறிந்த பொதுமக்களுக்கு நன்கு தெரியும்.

காங்கிரஸ் சட்ட சபைகளைப் பகிஷ்காரஞ் செய்து வந்தவரை இந்தியாவிலுள்ள பிற்போக்கான கட்சியார் இந்தியா சட்டசபை, மாகாண சட்ட சபைகள் முதலிய ஸ்தாபனங்களைத் தங்கள் பிதிரார்ஜித சொத்தாகப் பாவித்து கைப்பற்றி அவற்றின் வாயிலாகச் சுகபோகங்களை யனுபவித்து வந்தனர். கால தேச வர்த்தமானத்தை யொட்டி, காங்கிரஸ் சட்டமறுப்பைக் கைவிட்டு வேலைத் திட்டங்களை மாற்றிக்கொண்டு, தங்கள் நிர்மாண வேலைத் திட்டங்களில் சட்ட சபை பிரவேசத்தையுஞ் சேர்த்து கொள்ளவே, பிற கட்சியார்களுக்குக் கிலிபிடித்துவிட்டது. இனி, தாங்கள் தனியாட்சி செய்ய முடியாது என்று உணர்ந்தனர். அதற்கேற்ப, 1934-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் நடந்த இந்தியா சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தி பெருவெற்றி யடையவே, பிற கட்சியார்க்குக் கொஞ்ச நஞ்ச மிருந்த சந்தேகமும் நீங்கிவிட்டது. அத்தேர்தலில் மிகச் செல்வாக்கு பெற்றவர்களெல்லாம் தங்கள் பதவிகளை இழந்தனர். மேலும், காங்கிரஸ் வரப்போகும் பொதுத் தேர்தலில் மாகாண சட்டசபைகளுக்கும் அபேட்சகர்களை நிறுத்தத் தீர்மானித்து விட்டபடியாலும், கூடிய சீக்கிரம் அமலுக்கு வரவிருக்கும் புதிய சீர்திருத்தத்தைத் தகர்த்தெறிவதற்காக மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று காங்கிரஸிலுள்ள தலைவர்களில் பெரும்பாலார் கருதுகிறபடியாலும் 'தாங்கள் பொதுத் தேர்தலில் தலைகாட்டவே முடியாது; தலைகாட்டி நின்றாலும், அடியோடு முறியடிக்கப் படுவது நிச்சயம்' என அவர்கள் எண்ணி நடுக்கங் கொள்ளலாயினர். புதிய அரசியல் சீர்திருத்தம் குறைபாடுடையது என்று சொல்லிக்கொண்டே, அதை இரு கையாலும் ஏற்று, தேசத்தைக் காட்டிக் கொடுத்தாயினும் வெற்றிகரமாக நடத்திக் காட்டி பிரிட்டிஷ் சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளெனப் பெயரெடுத்து, அதன் வாயிலாக பல நன்மைகளை யடையலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தவர்களுக்கு, காங்கிரஸ் மாகாண சட்ட சபைகளையுங் கைப்பற்றப் போகிறது; மந்திரி பதவிகளையுங் காரியார்த்தமாக வகிக்க யோசித்துக் கொண்டிருக்கிறதென்றால், பயமும், ஏமாற்றமும் ஏற்படுவது இயற்கைதானே? ஆகவே, பிற்போக்கான கொள்கைகளையுடைய இக்கட்சியினரெல்லாம் ஒன்று சேர்ந்து காங்கிரஸை எதிர்த்து அதன் செல்வாக்கை எவ்வகையாகிலுந் தொலைக்கப் பலவகையிலும் முயன்று வருவதைக் கண்டு நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இதனிடையே, கடந்த மார்ச்சு மாதத்தில் லக்ஷ்மணபுரியில் காங்கிரஸ் கூடியது. அதற்கு இந்தியாவின் இளஞ்சிங்கமான பண்டித ஜவஹர்லால்

நேரு தலைமை வகித்தார். இக் காங்கிரஸில் எதிர்கால வேலைத்திட்டங்களைப்பற்றி என்ன முடிவு செய்யப் போகிறதென்று பிற்போக்கான கட்சியார் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். 'பண்டித ஜவஹர்லால் காங்கிரஸிலேயே அதிதீவிர போக்குடையவரும், சமதர்மவாதியுமாதலால், அவர் காங்கிரஸ் சட்டசபை பிரவேசஞ் செய்வதையே ஆதரிக்க மாட்டார்; அப்படி அதை யாதரித்தாலும், மந்திரி பதவி யேற்கும் விஷயத்தை உதறியே தள்ளி விடுவார். ஆகையால், பண்டித நேரு இச் சமயம் காங்கிரஸுக்குத் தலைமை வகிப்பது நமக்கு அநுகூலமேயாகும்' என்று அவர்கள் அற்ப சந்தோஷங் கொண்டிருந்தனர். அவர்கள் எண்ணியதற்கு மாறாக லக்ஷ்மணபுரி காங்கிரஸ் நடவடிக்கையும், முடிவும் இருக்கவே, அவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர். அதிலும், காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்பதா? வேண்டாமா? என்ற விஷயத்தைப்பற்றி ஒருவித முடிவுக்கும் வாராமல் தள்ளி வைத்து விடவே, அவர்களுக்கு இன்னும் நடுக்க மேற்பட்டு விட்டது. தாங்கள் பழையபடி ஆதிக்கம் பெறுவதற்கு எவ்வகையில் தயாராவது என்ற விஷயம் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. ஆகவே, அவர்கள் லக்ஷ்மணபுரி காங்கிரஸில் காந்தி சிஷ்யர்களுக்கும், பண்டித நேரு கோஷ்டியாருக்கும் இடையே ஏற்படும் என்று எதிர்பார்த்த பிளவை, இப்போது எவ்விதத்தாயினும் உண்டு பண்ணி, காங்கிரஸுக்குச் செல்வாக் கில்லாதபடி செய்துவிட வேண்டுமென்று தலைகீழாக நின்று வேலை செய்து வருகின்றனர்.

பண்டித ஜவஹர்லால் தாம் சுற்றுப் பிரயாணஞ் செய்துவரும் இடங்களிலெல்லாம் காங்கிரஸ் பிரசாரத்தோடு சமதர்மப் பிரசாரத்தையுஞ் செய்து வருகிறார். ராஜேந்திர பிரஸாத், ஸ்ரீ. ராஜகோபாலாசாரியார், ஸ்ரீ சத்தியமூர்த்தி முதலியவர்கள் சமதர்ம பிரசாரஞ் செய்வதற்கு இது சமயமல்ல எனக் கூறுகின்றனர். இவ்விரு திறத்தாரிடையேயும் உள்ள அபிப்பிராய பேதங்களைப் பெரிதுபடுத்திக் காட்டி, 'காங்கிரஸுக்குள் பிளவு ஏற்பட்டு விட்டது; காங்கிரஸுக்குள் பிளவு ஏற்பட்டு விட்டது' என்றெல்லாம் இப் பிற்போக்காளர்கள் புரளி செய்து வருகின்றனர். அவர்களை ஆதரிக்கும் பத்திரிகைகளும் இல்லாதது பொல்லாததெல்லாம் எழுதி சாடு கட்டி வெளியிடுகின்றனர். இப் பொய்ப்புரளிகளை ஐரோப்பாவிலுள்ள பத்திரிகைகளும், பிரமுகர்களும் தங்கள் கட்சிக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்கின்றனர்.

பண்டித ஜவஹர்லாலின் சமதர்மப் பிரசாரம், சிமன்லால் செதல்வாட் போன்ற மிதவாதத் தலைவர்களுக்கும், காங்கிரஸிலேயே மில் முதலாளிகளாகவும், பெரிய வர்த்தகர்களாகவும் உள்ளவர்களுக்கும் பெரிய பயத்தை யுண்டுபண்ணி விட்டது. அவர்கள் மூலைக்கொரு பக்கம் முறையிட ஆரம்பித்து விட்டார்கள். மிதவாதிகள் பண்டிதர் காங்கிரஸ் சமதர்மப் போர்வையில் ருஷியப் பொதுவுடைமைப் பிரசாரஞ் செய்கிறார் எனப் பூச்சாண்டி காட்டி சர்க்காரை உதவிக்கழைக்கிறார்கள். இவ்வித நிலைமை, பிற்போக்கான கட்சியினரின் பொய்ப் பிரசாரத்துக்கு ஆதிக்கங் கொடுக்குமன்றோ! ஆகவே, அவர்கள் "பண்டித நேருவுக்கும் அவரது காங்கிரஸ் நண்பர்களுக்கும் அபிப்பிராய பேதம் வளர்ந்து கொண்டே வருகிறது. காங்கிரஸுக்குள் இப்போதோ நாளைக்கோ பிளவு ஏற்பட்டு விடப் போகிறது. பயங்கரமான சம்பவங்களெல்லாம் நடைபெறப் போகின்றன" என்றெல்லாம் அவர்கள் அடிக்கடி சொல்லத் தலைப்பட்டு விட்டனர்.

இவ்வித பொய்ப் பிரசாரத்தையும், தப்பபிப்பிராயத்தையும் பரவச் செய்து வரும் விஷமிகளுக்குச் சாட்டை கொடுக்கும் வகையில், பண்டித நேரு, "எனது நண்பர்களுக்கும், என் மீது குறை கூறுபவர்களுக்கும்" என்று தலைப்பிட்டு அறிக்கை யொன்று வெளியிட்டிருக்கிறார். அதைக் காங்கிரஸ் விரோதிகளும் படித்து

அறவு பெற வேண்டு மென்று "விகடன்" விரும்புகிறான்.

பண்டித நேரு தமது அறிக்கையில் பொது மக்களிடையே குழம்பிக் கொண்டிருக்கும் பல விஷயங்களைப் பற்றித் தெளிவாக விளக்கி யிருக்கிறார்.

"காங்கிரஸில் பிளவு என்று கூறுவதெல்லாம் வெறும் முட்டாள்தனம். சுதந்திரப் போரின் சங்கநாதம் எங்கள் நாம்புகளில் ஓடும் ரத்தத்தைக் கொதிக்கவைக்கும் போது எங்களிடையே பிளவு என்பது இருக்க முடியாது."

என்ற பண்டிதரின் ஆணித் தரமான பதிலி லிருந்தாவது காங்கிரஸில் பிளவு என்று பறைபறைவோர் வாய் அடையும் என்று விகடன் நம்புகிறான்.

மக்களா யிருந்தால் அவர்கள் ஒவ்வொருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட கருத்து இருப்பது சகஜம். எல்லோரும் ஒரே மனப் பான்மையோடு இருப்பார்கள் என்றும், இருக்க வேண்டு மென்றும் எதிர்பார்ப்பது முடியாதகாரியம். எனவே காங்கிரஸில் இருக்கும் தலைவர்களுக்குள் சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் இருப்பதைக் கண்டு யாரும் ஆச்சரியப் படுவதற் கிடமில்லை. காங்கிரஸி லிருப்போர் பெரும் பான்மையோரின் ஏகோபித்த முடிவுக்குக் கட்டுப் படுகின்றனரா என்பதே கவனிக்க வேண்டிய விஷயம். ஜவஹர்லால் தனிப்பட்ட முறையில் தீவிரமான போக்கும் கொள்கைகளும் உடையவர். என்றாலும், அவர் காங்கிரஸிலுள்ள பெரும் பான்மை யோருடைய கருத்துக்களுக்குக் கட்டுப் படாம லிருப்பதில்லை. அது போலவே, மற்ற காங்கிரஸ் தலைவர்களும் தங்களுக்குப் பிடித்த மில்லா விடினும், பண்டிதரின் சில கொள்கைகளை ஏற்றுக் கொண்டு நடக்க முயல்கிறார்கள். எனவே, இவ் விருசாராரும், தங்கள் நலன்களுக்காக என்றில்லாது இந்தியாவிலுள்ள பொது மக்கள் அனைவருக்கும் நன்மை யளிக்கக் கூடிய விஷயங்களில் ஒத்துழைக்க முயன்று வேலை செய்து வருகிறார்கள். இவ் வுண்மையைப் பண்டித நேரு,

"நம்முடைய பெரிய லட்சியம் இந்திய சுதந்தரம்; அது தான் முக்கியம். எங்களுக்குள் சில அபிப்பிராய பேதங்க ளிருக்கலாம். ஆனால் அந்த அபிப்பிராய பேதங்களை விட நாங்கள் ஏகோபித்து அங்கீகரித்த விஷயங்கள் தான் அதிகமாய் இருந்தன. இவைகளை முன்னிட்டு, நாங்கள் எல்லோரும் ஒத்துழைத்து வேலை செய்வதென்று ஒப்புக்கொண்டோம்"

என்று உள்ள விஷயத்தை நன்கு வெளியிட்டிருக்கிறார்.

கதரைப் பற்றிக் குறை கூறுபவர்கள், பண்டித நேரு கதர் திட்டத்தை ஒப்புக் கொள்ள வில்லை எனக் கூறி வருகின்றனர். அது தவறு என்பதை, "நாம் இப்போதிருக்கும் நிலையில் அரசியல், சமூகப் பொருளாதாரத் துறைகளில் கதருக்கு நிச்சயமான ஸ்தானம் உண்டு; ஆகவே அதை ஆதரித்துத் தானாக வேண்டும்" என்று பண்டிதர் வார்த்தைகளைக் கொண்டே மறுக்கலாம். மற்றொன்று பண்டித நேருவைப் பற்றிக் கூறுவது. அவர் ரஷியாவை அப்படியே பின்பற்றுபவர் என்பதாகும். "ரஷ்யாவில் நடந்திருப்பவைகள் யாவற்றையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே, நான் கண்ணை மூடிக்கொண்டு ரஷ்யாவின் உதாரணத்தைப் பின்பற்றுவதாக இல்லை" என்று அவர் எழுதியுள்ள மொழிகளே அது தவறென்பதை மறுப்பதற்குப் போதியதாகும்.

எனவே, பண்டித நேருவின் இவ்வறிக்கையிலிருந்து, காங்கிரஸ் பொதுஜன நன்மையை நாடும் வரையில் அதில் பிளவு ஏற்படாது என்பது உறுதி யென்று நன்கு புலனாகிறது. இதற்குப் பிறகும், யாரேனும் காங்கிரஸில் பிளவு என்று கூற முற்படு வார்களேயானால், அவர்கள் பைத்தியக்காரர்களாக அன்றி வேறு யாராகவும் இருக்க முடியாது என்று "விகடன்" தெரிவிக்க விரும்புகிறான்.

காலச் சக்கரம்

தாமஸ் குற்றவாளி?

பிரிட்டிஷ் வரவு செலவு திட்டத்தின் இரகசியம் பார்லிமெண்டுக்கு வருவதற்கு முன்பே வெளியாய் விட்டதும், அது சம்பந்தமாகக் கிளர்ச்சி யேற்பட்டு விசாரணை நடந்ததும் ஆகிய விஷயங்களைப்பற்றி "விகடன்" கடந்த இதழிலேயே விவரித்திருக்கிறான். இவ்விஷயத்தை விசாரணை செய்த பிரத்தியேக நியாய சபையார் தாங்கள் செய்த முடிவை இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். அதில் இவ்வரவு செலவு திட்ட இரகஸியம் மிஸ்டர் தாமஸ் வாயிலாகவே வெளியாகி யிருக்கிறது என அவர்கள் ஏகமனதாகக் கூறிவிட்டனர். விசாரணை காலத்தில் மிஸ்டர் தாமஸ் கொடுத்த சாட்சியம் சந்தேகத்துக்கு இடங்கொடுக்கக் கூடியதாக இருந்ததாம். அத்துடன், அவர் தமது சுயசரிதையை வெளியிடும் உரிமையை மிஸ்டர் பேட்ஸுக்கு கொடுத்து அதன் மூலமாகப் பெருந்தொகை பெற இருவரிடையேயும் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதால், அச் சம்பந்தத்தை யொட்டி மிஸ்டர் தாமஸ் வரவு செலவு திட்ட இரகசியத்தை வெளியிடும் விஷயத்தில் மிஸ்டர் பேட்ஸிடம் சலுகை காட்டி யிருக்கலா மென அநுமானிக்கப்பட்டது. இந்த இரகசியம் வெளியாகும் விஷயத்தில் உடந்தையாக இருந்ததாக மிஸ்டர் தாமஸ் குமாரர் மிஸ்டர் லெஸ்லி தாமஸ் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. நியாய சபையார் அவர் குற்றவாளியல்ல வென்று விடுவித்து விட்டனர். அவ் வகையில் அவர் தப்பித்துக் கொண்டார். நியாய சபையாரது தீர்ப்பு காமன்ஸ் சபையில் சமர்ப்பிக்கப்படும். அதற்கு மேல் என்ன நடை பெறுமோ "விகடனு"க்குத் தெரியாது. மிஸ்டர் தாமஸ் உண்மையில் குற்றவாளியோ இல்லையோ! நியாய சபையார் அவரைக் குற்றவாளி யெனத் தீர்மானித்து விட்டனர். அவர் உயர் நிலை யடைவதற்குப் படியாக இருந்த தொழிற் கட்சிக்குச் செய்த துரோகத்துக்குக் கை மேல் பலன் பெற்று விட்டார். இனி, அவரது அரசியல் வாழ்வு அஸ்தமித்து விட்டதென்றே கூற வேண்டும். தமக்கு நேர்ந்த அவமானத்தை நினைந்து நினைந்து வருந்தும் மிஸ்டர் தாமஸுக்கு "விகடன்" தனது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறான்.

* * *

மீண்டும் ஸர். ஸாமுவேல் ஹோர்

மிஸ்டர் தாமஸுக்குப் பதிலாக, ஸர். ஆர்ம்ஸ்பி கோர் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டு விட்டார். இதனிடையே இப் பதவிக்கு ஸர். ஸாமுவேல் ஹோர் வருவார் என்று வதந்தியிருந்தது. ஸர். கோர் குடியேற்ற நாட்டுப் பிரச்சினைகளை நன்கறிந்தவராம். 'வெள்ளையர் பொறுப்பு' என்ற உணர்ச்சிக்கு இடங் கொடாமல் மற்ற வகுப்பார் நலன்களையும் அவர் பாதுகாப்பார் எனவும் கூறப்படுகிறது. அது எப்படியாகிலும் போகட்டும். நமது இந்தியருக்குப் பெரிதும் அறிமுகமானவரான ஸர் ஸாமுவேல் ஹோர் மீண்டும் பிரிட்டிஷ் மந்திரி சபையில் ஸ்தானம் பெற்று விட்டது தான் "விகட"னுக்கு ஆச்சரியமா யிருக்கிறது. அவர் இப்போது புதிய கடற்படை மந்திரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். ஸர். ஹோர், மந்திரி சபை இப்போதிருக்கும் நிலைமையில் அதில் சேர்ந்து கொள்ள விரும்ப வில்லையாம். பிரதம மந்திரி பால்டுவின் விருப்பத்துக்கு இணங்கியே அவர் அப் பதவியை ஏற்றுக் கொண்டாராம். அவர் வெளிநாட்டு மந்திரி பதவியை ராஜிநாமா செய்த போது மிஸ்டர் பால்டுவின் துடி துடித்தாரல்லவா! சந்தர்

ப்ப மேற்பட்ட போது தமது அரசியல் முறைவைச் சேர்த்துக் கொள்ள முயன்றது நியாயமே. ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விஷய மொன்றிருக்கிறது. ஸர். ஹோர் எதற்காக தமது வெளிநாட்டு மந்திரி பதவியை ராஜிநாமா செய்தார்? எதியோபியா—இத்தாலி சமரச விஷயத்தில் பாரபக்ஷமாக நடந்து கொண்டதற்காக வன்றோ? ஆகவே, அந்த எதியோபியர்—இத்தாலி விஷயம் இன்னும் ஒருவித முடிவையும் அடையவில்லை. அவை சம்பந்தமான பிரச்சினை மிகவும் நெருக்கடியான நிலையை அடைந்திருக்கிறது. ஸர்வதேச சங்கம் இது விஷயமாக நியாயமான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இதற்கு முன்பை விட இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே உலகின் அவநம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கும் பிரிட்டிஷ் மந்திரி சபை, இச் சமயத்தில் ஸர். ஹோருக்கு மீண்டும் பொறுப்புள்ள பதவி கொடுப்பதன் மூலமாகத் தவறான வழியில் செல்வது வருந்தத் தக்கதாகும். பதவி வேறாக விருப்பதனாலேயே நிலைமை மாறிவிடாது. அரசியல் வாழ்வில் பரிசுத்தம் பாதுகாக்கப் படும் என வார்த்தையளவில் சொல்லிக் கொள்ளும் பிரிட்டிஷ் அரசியல் நிபுணர்கள் செயலில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை நாம் அறிவதற்கு இது ஒரு சிறந்த உதாரணமல்லவா!

* * *

ஓட்டர்களுக்கு வசதி

புதிய இந்திய அரசியல் சீர்திருத்தத்தின்படி, சமீபத்தில் பொதுதேர்தல் வரப் போகிறது—அதாவது மாகாண சட்ட சபைகளுக்குத் தேர்தல்கள் நடைபெறப் போகின்றன. அதற்குப் பல கட்சியினரும் அபேட்சகர்களை நிறுத்துவர். அவ்வபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பொதுமக்களாகிய ஓட்டர்களிடத்திலிருக்கிறது. அவ்வாறு ஓட் செய்பவர்கள் இதுவரை வீட்டுச் சொந்தக்காரர்களாகவும், ஒரு குறிப்பிட்ட தொகையை முனிசிபாலிடிக்கு வரியாகக் கட்டுபவர்களாகவும், வருமான வரி கட்டுபவர்களாகவும் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. ஆனால், சில காலத்துக்கு முன் வாக்குரிமையை ஆராய்ச்சி செய்வதற்கென்றே இந்தியா வந்து சென்ற லோதியன் கமிட்டியார் சிபார்சுப்படி எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் மாகாண சட்டசபைகளுக்கு நடைபெறும் தேர்தல்களுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க உரிமையுண்டு. இவ்வளவு தூரம் பொதுமக்களுக்கு ஓட்டுரிமை யளிக்க முன் வந்த சர்க்கார், அதற்குப் போதிய வசதியைச் செய்துதரத் தவறிவிட்டார்களென்றே வருத்தத்தோடு கூறவேண்டியிருக்கிறது. முதலில் எல்லோரும் முனிசிபல் கமிஷனரிடம் நேரில் சென்று ஓட்டராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டனர். உடனே தேசியத் தலைவர்கள், இது பொதுமக்களுக்கு மிகவும் கஷ்டமானதாகும் எனக் கிளர்ச்சி செய்யவே, அந்தந்த டிவிஷனிலுள்ள கவர்ன்மெண்டு ஆபீஸர் எதிரில் ஓட்டுரிமைப் பத்திரத்தைப் பூர்த்திசெய்து அவர் 'சர்டிபை' செய்து முனிசிபாலிடிக்கு அனுப்பினால் போதும் என்று மறு உத்தரவு போடப்பட்டது. மறுபடியும் என்ன காரணத்தாலோ சர்க்கார், கவர்ன்மெண்டு ஆபீசர் 'சர்டிபை' செய்தாலும், அந்தந்த டிவிஷன் பாடசாலைகளிலும், முனிசிபல் சுகாதார ஆபீஸ் முதலியவைகளிலும் உள்ள உத்தியோகஸ்தர்களிடம் ஒவ்வொரு ஓட்டரும தங்கள் ஓட்டுப் பதிவு பாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று மாற்றிவிட்டனர். இவ்வாறு நிமிஷத்துக்கு நிமிஷம் உத்தரவு போட்டுக்கொண்டேயிருந்ததால், ஓட்டர்கள் தங்கள் ஓட்டுரிமையைப் பதிவு செய்யும் விஷயத்தில் பெரிதும் சங்கடமடைந்தனர். ஏராளமாக ஓட்டர்கள் பதிவாவதற்கு இடமில்லாமல் போயிற்று.

* * *

இவ்வளவு பேர்தானா?

இந்த ஒன்றிரண்டும் மாதமாக, அதாவது சென்ற 10-ந்தேதி புதன் கிழமை

மாலைவரை, 29,350-பேர் தான் ஓட்டர்களாகப் பதிவு செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நகரில் வசிக்கும் ஜனங்கள் சுமார் ஆறரை லட்சம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில், குறைந்தது 50,000 பேராவது ஓட்டர்களாவார்களென்று சர்க்கார் மதிப்பிட்டனர். அவ்வாறு அவர்கள் மதிப்பிட்ட ஜனத்தொகையில் பாதிபேர்கூட ஓட்டர்களாகச் சேரவில்லையென்றால், அதற்குக் காரணமென்ன? சர்க்கார் இவ்விஷயத்தில் பொதுஜனங்களுக்குப் போதிய வசதி செய்து கொடுக்காததேயாகும். இரண்டாவது நம்மவரில் பலர் இன்னும் ஓட்டுரிமையின் மதிப்பையுணராதவர்களாயிருக்கிறார்கள். நமது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் திரு. சத்தியமூர்த்தி முதலியவர்களே இது சம்பந்தமாகப் பொதுஜனங்களிடை பிரசாரஞ் செய்யவில்லையென்றால், இப்போது சேர்ந்திருக்கும் இந்த 29,350 பேர்கூடச் சேர்ந்திருக்க மாட்டார்கள். ஜனகணிதமெடுப்பதற்குச் சர்க்கார் எம்முறையைக் கையாளுகிறார்களோ அதே முறையை இவ்வோட்டர்களைச் சேர்க்கும் விஷயத்திலும் கையாண்டிருப்பார்களானால், மிக எளிதாக ஓட்டர்களைச் சேர்த்துவிட்டிருக்கலாம். நிலைமை எப்படியோ!

* * *

இன்றே ஓட்டராகுங்கள்

இதுவன்றி ஓட்டரானவர்கள் தவிர, மற்றுமுள்ளவர்கள் ஓட்டராவதற்காக, சர்க்கார் இன்னும் காலத்தை நீடித்திருக்கிறார்கள். இது வரை கொடுத்த அவகாசம் போதியதில்லையென்பதையுணர்ந்து சர்க்கார் காலத்தைத் தள்ளிவைத்தது பாராட்டத் தக்கதே. ஆயினும், சென்னை நகரில் இதுவரை செய்து கொடுத்திருந்த சில வசதிகளை 10-ந் தேதிக்கு அப்பால் ரத்து செய்து விட்டது வருந்தத் தக்கது. இது ஒரு பக்கத்தில் உரிமை கொடுத்து மற்றொரு பக்கத்தில் அதைப் பறித்துவிடப் பார்ப்பது போலல்லவா இருக்கிறது! இவ்விஷயத்தில் சர்க்காருக்கு சில கஷ்டங்கள் இருப்பதையும் "விகடன்" உணர்கிறான். ஆனால் அக் கஷ்டங்களை எளிதில் நீக்கிக் கொள்ள அவர்களுக்கு வழியில்லாமலில்லை. அவர்கள் போட்ட உத்தரவை மாற்றாதிருக்கும் வரை "விகடன்" ஒன்றும் கூறுவதற்கில்லை. ஓட்டர்களாகத் தகுதியுடைய—எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டும் "விகடன்" ஒரு வார்த்தை கூற விரும்புகிறான். ஓட்டுரிமையைப் பதிவு செய்வதில் உள்ள கஷ்டநஷ்டங்களையெல்லாம் பொருட்படுத்தாது எழுதப் படிக்கத் தெரிந்த ஆண், பெண் அனைவரும் இம்மாத முடிவுக்குள் தங்கள் விண்ணப்பங்களை முனிசிபல் ஆபீஸுக்கு நேரே கொண்டுபோய்க் கொடுத்து தங்களுக்குள்ள ஓட்டுரிமையைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். இவ்வாறு நாம் ஓட்டுரிமையாளராக ஆவது, நாம் சுதந்தரமடைவதற்கு முதற்படியாகும். நாம் முதலில் ஓட்டுச் சுதந்தரத்தைப் பெற்றால்தான், நம் நாட்டையும் சுதந்தர நாடாக ஆக்க முடியும் என்பதை உணரவேண்டும். ஆகவே, சகோதர சகோதரிகளே! இன்றே ஓட்டராகுங்கள். நாளைக்குச் செய்யலாம், நாளைக்குச் செய்யலாம் என நாளைக் கடத்திவிட்டு கடைசியாக ஏமாறாதீர்கள் என்றே "விகடன்" எச்சரிக்கிறான்.

* * *

ஓட்டர்களைச் சேர்க்க ஆயிரரூபாய்

பம்பாய் நகரத்தில் ஓட்டுரிமை உள்ளவர்கள் யாவரையும், ஓட்டர் ஜாபிதாவில் சேர்ப்பதற்காக, பம்பாய் காங்கிரஸ் கமிட்டியார் ஆயிரம் ரூபாய் அநுமதித்திருக்கிறார்களாம். இச் செய்தியைக் கேட்டு "விகடன்" மனம் பூரிக்கிறான். பம்பாய் காங்கிரஸ் கமிட்டியாரின் தாராள மனப்போக்கை எவரும் பாராட்டாதிருக்க முடியாது. இக் கமிட்டியார் காட்டிய வழியை மற்ற மாகாணக் காங்கிரஸ் கமிட்டியார் பின் பற்றுவார்களா? முக்கியமாக நமது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் இவ் வுதாரணத்தைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்று "விகடன்" ஆசைப்படுகிறான்.

சூரிய வெப்பத்தின் பலன்.



சீமாட்டி கார்த்தியாயினி

("ஜீவா")

இந்திராணி மற்ற மங்கையரோடு வம்பளந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில், கார்த்தியாயினியும் சிவசைலமும் கூடத்தின் ஒரு மூலையில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். பெண் விருந்தினர்களை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்த கார்த்தியாயினி ஏதோ காரியார்த்தமாகக் கூடத்துக்குச் சென்றாள். கூடத்தை யடுத்த அறையில் வேறொரு வேலையைக் கவனித்துக் கொண்டிருந்த சிவசைலம் இவளைக் கண்டதும் அங்கு வந்து சேர்ந்தான். ஏதோ பேச்சை ஆரம்பித்த இருவரும் ஒருவர்மீ தொருவர் வைத்துள்ள காதற் பெருக்கினால், சமய சந்தர்ப்பத்தையும், விருந்தினர்கள் சூழ்மி யிருப்பதையும் மறந்து நெருங்கி நின்று நீளப் பேசிக் கொண்டே யிருந்தனர்.

சிவசைலம் கார்த்தியாயினியைக் கண்டதுமே அவளது பேரழகில் மனதைப் பறி கொடுத்து விட்டதால், அவள் பிறனொருவனுக்கு உரியவள் என்பதை யறிந்த பின்னரும், அவள் மீது கொண்ட மோகத்தை மாற்றிக் கொள்ள இடலாதவனாய், அவளது காதலின்பத்தைத் தவறான வழியிலாயினும் பெற முயன்று கொண்டிருந்தான். ஸர். பரமேஸ்வரன் பிள்ளை விவாக ஏற்பாடு சம்பந்தமாக சிவசைலத்தை, திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளையிடம் அனுப்பி வைத்தது அவனது கருத்துக்கு அநுகூலமாக முடிந்தது.

கார்த்தியாயினியோ சிவசைலத்தைப் பார்த்ததும், அவனது கம்பீர தோற்றத்தில் கவர்ச்சியுற்றாளாயினும், அடுத்த கணத்தில் தான் அவனைப் பற்றி மனதில் நினைப்பதே தவறானது என்று உணர்ந்தாள். அதன் பின், அவள் தன் மனதோடு போராடி சிவசைலத்தை மறக்க முயன்று வந்தாள். ஆனால், அவளது முயற்சிக்கு எதிர் மாறாக அவள் திருவனந்தபுரத்தை விட்டு வந்த இரண்டொரு வாரங்களுக்கெல்லாம் சிவசைலம் அங்கு வந்தது முதலில் அவளுக்குப் பெரிதும் சங்கடத்தை யுண்டு பண்ணியது. ஆயினும், சிவசைலம் இங்கு வந்த இரண்டொரு

காளில் அவனது இங்கித மொழியும், விநய பூர்வமான செயலும் கார்த்தியாயினியின் மனதை மாற்றி மீண்டும் அவன் மீது கவர்ச்சி கொள்ளச் செய்தன. விரிவாகச் சொல்ல வேண்டுமானால், கார்த்தியாயினி தனது உள்ளக் கமலத்தில் சிவசைலத்தின் கம்பீர உருவத்தைக் குடிகொள்ளச் செய்து நினைவு மலர்களை இடைவிடாது தூவி யருச்சனை செய்து வந்தாள் என்று கூறுவது பொருந்தும். அவள் ஒழுக்கத்தைத் துறந்தாள்; சமூக கட்டுப்பாட்டை மறந்தாள் சிவசைலத்தின்மீது அளவு கடந்த பிரேமை கொண்டுவிட்டாள். இவ்வரம்பு மீறிய தனது செயலால், தான் பிறந்த குடும்பத்துக்கும், புகுந்த குடும்பத்துக்கும் எந்தவிதமான அவமானமும், அகௌரவமும், களங்கமும் ஏற்படும் என்பதை அவள் உணர்ந்து பார்க்கச் சக்தியற்றவளானாள் என்றே சொல்லவேண்டும். எனவே, இவர்களிருவரும் தங்கள் நிலையை மறந்து காதலுலகில் சஞ்சரித்து இன்பத்தின் எல்லையைக்காண முயன்றுகொண்டிருந்தனர். இவ்வித நிலையில் தற்போது இருக்கும் இவ்விருவரும் சுற்று வட்டம் சமய சந்தர்ப்பங்களைக் கவனியாது தாராளமாகப் பேசிப் பழகிக் கொண்டிருந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

இங்ஙனம் கார்த்தியாயினியும், சிவசைலமும் பேசிக்கொண்டிருக்கையில், தற்செயலாக சிவசைலத்தின் பார்வை பெண்களிருந்த பக்கம் வீழ்ந்தது. அவர்களில் ஒரு சில பெண்மணிகள் தங்களிருவரையும் அடிக்கடி பார்த்து குறும்பாகச் சிரித்து ஏதோ குசுகுசுவெனப் பேசிக்கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. மேலும் அவன் நாலாபக்கமும் சுற்றிப் பார்க்கலானான். கலியாணத்திற்கு வந்திருப்பவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் இருவரையுமே கவனித்துக் கொண்டிருப்பதையறிந்தான். அவனது தேகம் ஒரு விநாடி விதிர்ப்புற்று நின்றது. தன்னுடைய மடமைக்காக அவன் தன்னையே நொந்துகொண்டான். அடுத்த கணம் தன் நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு அவன் புன்சிரிப்பை வலிய வருவித்த வண்ணம், "கார்த்திகா! நம்மைப் பிறர் கவனிக்கிறார்களே; பார்த்தாயா?" என்று கேட்டான்.

இதைக்கேட்டு மன அதிர்ச்சியுற்ற கார்த்தியாயினி, "என்ன! கவனிக்கிறார்களா? நம்மையா? ஏன்? எதற்காக?" எனப் படபடப்பாக வினவினாள்.

"எதற்காகக் கவனிக்கிறார்கள் என்பதற்குக் காரணங்கூடவா வேண்டும்?"

"அப்பா! இந்த மனிதர்களே மிகக் கொடியவர்கள். குரோத நெஞ்சங்கொண்டவர்கள். நாம் பேசிக்கொண்டிருந்தாலென்ன! இவர்கள் குடியா முழுகிப்போய் விட்டது"

"கொடியவர்கள்! ஆம்; கொடியவர்கள். இவர்களுக்கு—அதிலும் ஒரு சில பெண்களுக்கு—வம்பளக்க ஏதாயினும் வேண்டுமல்லவா!"

"இவர்கள் வம்பளப்பு நம்மை என்ன செய்துவிடும்? ஒரு மங்கை ஆடவனொருவனோடு பேசிக் கொண்டிருப்பது என்ன தவறு? அவர்கள் ஒருவருக்கொருவர் சிநேக முறையில்கூட வா[illegible]ழகக்கூடாது?" எனக் கார்த்தியாயினி அப்போதைய மனப் போக்குக்கேற்ப வாதித்தாள்.

சிவசைலம் கார்த்தியாயினியை ஒரு விதமாகப் பார்த்த வண்ணம், "என்னமோ! இந்த சமூக அமைப்பு அப்படி இருக்கிறது—இம்மனிதர்களின் மனப் போக்கைக் கவனித்தால்—ஒன்று நம் தோழமைக்கு இன்றோடு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்! இல்லாவிட்டால், இவர்களை விட்டு நாம்...... ...." எனக் கூறிக் கொண்டே வந்தவன் மேலே பேசாது வார்த்தைகளை விழுங்கினான்.

கார்த்தியாயினி ஆத்திரத்தோடு, "அது மிகவுங் கொடுமை" என்றாள்

"அப்படியானால், நாமும் கொடுமையாகவே நடந்து கொள்ள நேரும்" என்று சிவசைலம் மெதுவாக மொழிந்தான்.

இதே சமயத்தில் கலியாணத்தின் முக்கிய சடங்காகிய மாங்கலிய தாரணம் நடைபெற வேண்டிய நேரம் சமீபித்து விட்டதால் கார்த்தியாயினி அங்கு கூப்பிட்டாள். எனவே, கார்த்தியாயினி அவ்விடத்தை விட்டு நடந்து சென்று மணப் பந்தலை யடைந்தாள். உடனே வாத்தியங்களெல்லாம் ஏககாலத்தில் முழங்கின. பிராமணப் புரோகிதர்கள் வேத மந்திரங்களை வாசா மகோசரமாக ஓதலாயினர். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் மண மக்கள்மீது மலர்மாரி பொழிந்தனர். இவ்வித வைபவங்களிடையே நாராயண மேனன் தேவகியின் கழுத்தில் மாங்கலியத்தைச் சூட்டினன்.

பெண்கள் வரிசையில் பேச்சாரவாரமும், சிரிப்பொலியும் அதிகமாயிற்று. விருந்தினரில் பலர் இதுவரை உட்கார்ந்திருந்த சிரமந் தீர்வதற்காக, இங்கும் அங்குமாகத் திரிந்து கொண்டிருந்தனர்; சிலர் நாலைந்து பேராகக் கும்பல் கும்பலாகக் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர்.

திவான் பகதூர் கார்த்திமதிநாதம் பிள்ளை சிரம பரிகாரஞ் செய்துகொள்வதற்காகவோ, என்னவோ மேன்மாடிக்குச் சென்றார். தாக்ஷாயணி, சூடாமணி முதலிய மங்கையரோடு மிகவும் வீம்பு பேசி விட்டுவந்து, கார்த்திமதிநாதம் பிள்ளையை அணுக முடியாது இதுவரை தவித்துக் கொண்டிருந்த இந்திராணி, அவர் மேன்மாடிக்குத் தனியாகப் போவதைக் கண்டதும், இதுதான் நல்ல சந்தர்ப்பமெனக் கருதித் தன் ஸ்தூல தேகத்தைத் தூக்கிக் கொண்டு அசைந்தாடிய வண்ணம் நடந்து மேன்மாடியை யடைந்தாள்.

மேலே போனதும், கோட்டைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டி விட்டு அங்கிருந்த சோபா வொன்றில் சாய்ந்து கொள்ளப் போன கார்த்திமதிநாதம் பிள்ளை தம் பின்னே யாரோ வரும் காலடி யோசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். இந்திராணி அவர் முன்னே அசட்டுப் புன்னகை செய்து நாணிக் கோணி நின்றாள்.

உடனே பிள்ளையவர்கள், "வா அம்மா! இந்திராணி! எல்லாருஞ் சௌக்கியமா! அண்ணா ஏன் கலியாணத்துக்கு வரவில்லை" என க்ஷேமலாபம் உசாவி உபசரித்தார்.

இந்திராணி ஒரு விதமாக முகத்தை வைத்துக்கொண்டு, "ஏதோ இருக்கிறோம். அவருக்கு அவசர ஜோலி ஏதோ இருப்பதாகச் சொல்லி என்னை மட்டும் அனுப்பினார்—நானாக வந்த பிறகாயினும் உமக்கு என்னிடம் பேசவேண்டுமென்று தோன்றிற்றே! அந்த மட்டும் நான் புண்ணியசாலிதான்—" என்று எடுப்பாகப் பேசினாள்.

"என்ன இந்திரா! அப்படிச் சொல்லுகிறாய்? உன்னிடம் பேசக்கூடாது என்று ஏதாகிலும் வைராக்கியமா? என்ன! —என் உத்தியோகம் அப்படியிருப்பதால் உங்களையெல்லாம் பார்த்துப் பேசுவதற்கு எனக்கு அவகாசம் ஏற்படுவதில்லை. அது தவிர, வேறென்ன இருக்கிறது?—அண்ணாவோடு அடிக்கடி வந்துகொண்டு இருக்கிறதுதானே அம்மா!" என்று கார்த்திமதிநாதம் பிள்ளை கூறினார்.

இவ்வாறு இவர்களிடையே பொதுவாகச் சம்பாஷணை சிறிது நேரம் நடைபெற்றது. பின்னர் இந்திராணி, "அதிருக்கட்டும் அத்தான்! உன் சீமாட்டியை என்ன இப்படி விட்டுவிட்டிருக்கிறாயே! நீ ஒன்றுங் கவனிப்பதில்லையா?" என்று பேச்சோடு பேச்சாகக் கேட்டாள்.

பிள்ளையவர்கள் ஒருவாறு திகைப்படைந்தவராய், "என்ன அவளுக்கு? எப்படியிருக்கிறாள்?" என்று வினவினார்.

"அவளுக்கு என்னவா! உன் சுந்தரியைப்பற்றி ஊரெல்லாம் பறையறையப்படுகிறது. உனக்கு ஒன்றுமே தெரியாதது போல் கேட்கிறாய். இப்படியிருந்தால், குடும்பம் உருப்பட்டாற் போல்தான்" என அவள் நீட்டிப் பேசினாள்.

"விஷயத்தைச் சொல்லேன் இந்திரா! அவளைப் பற்றி ஊரார் என்ன சொல்லுகிறார்கள்?" என்று சிறிது ஆத்

திரத்தோடேயே கேட்டார் கனம் மந்திரி.

இந்திராணி கொஞ்சம் மிடுக்காகவே, "சொல்வதற்கு வேறென்ன இருக்கிறது? நமது கார்த்தியாயினி கொஞ்சமும் நாணமின்றி திருவாங்கூரிலிருந்து வந்திருக்கும் அந்த பையனோடு சதா திரிந்து கொண்டும் பேசிச் சிரித்துக் கொண்டும் இருக்கிறாளே; அதைப் பற்றித் தான். இவர்கள் இவ்வாறு திரிவதைக் குறித்து ஜனங்கள் என்னென்னமோ வெல்லாம் சொல்கிறார்கள். அவற்றைக் கேட்கச் சகிக்கவில்லை. எனக்கே தலை குனிவா யிருக்கிறது. நீ என்ன தான் ஆதியி லிருந்து என்னைப் புறக்கணித்தாலும், என் அம்மான் மக ளல்லவா! உனக்கு வந்த அவமானம் எனக்கல்லவா! அந்த ரத்தபாசத்தால், மனந்தாளாமல் ஓடோடியும் வந்தேன்; விஷயத்தை உன்னிடஞ் சொல்லுவதற்கு. இப்போதே அவளைக் கூப்பிட்டுக் கட்டுத் திட்டம் பண்ணிவை. இல்லாவிட்டால், காரியம் மிஞ்சிப் போய் விடும்" என்று அளந்தாள்.

இதைக் கேட்டதும், திவான்பகதூர் காந்திமதி நாதம் பிள்ளை வாய் விட்டுக் கல கல வென நகைத்து, "அப்பாடா! இது தானா! கார்த்தியாயினி சிவசைலத்தோடு பேசுவதா குற்றமாகப் போய் விட்டது.—ஆம் நம் ஜனங்களே அப்படித் தானே! ஒரு பெண் ஆடவ னொருவனோடு பேசினாலே, 'அவர்களுக்குள் ஏதோ இருக்கிறது? அவ்வாறு ஒன்றுமில்லாமலா குசு குசு வெனப் பேசுகிறார்கள்' எனக் கதை கட்ட ஆரம்பிப்பார்களே!—இன்னும் நம் சமூகம் முன்னேற்றமடைய வெகு காலம் ஆக வேண்டும்.—இந்திரா! நான் ஏதோ மறுத்துப் பேசுகிறேன் எனக் கோபித்துக் கொள்ளாதே! உனக்கு ஒன்றுந் தெரியாது. உனக்கு வயது அதிகமாய் விட்டாலும் உலகப் போக்கை நீ அறிய வில்லை. அதற்குச் சந்தர்ப்பமுங் கிடையாது. நீ பழைய கர்நாடக மனுஷியாக இருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்பட வில்லை.—ஊரார் அப்படித் தான் ஒவ்வொருவரைப் பற்றியும் ஏதாகிலுஞ் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதை யெல்லாம் நாம் பாராட்டிக் கொண்டிருக்க முடியுமா? அல்லது அவர்களை அவ்விதம் பேசக்கூடாது எனக் கட்டுப்படுத்தத்தான் முடியுமா?—எனக்குத் தெரியும் என் குடும்பத்தை எவ்விதம் நடத்துவது! என் மனைவியை எவ்வாறு கட்டுப்படுத்துவது? என்று. மற்றவர்கள் வந்து எனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை.—இந்திரா! நீ வந்த காரியத்தைப் போய்க் கவனி" என்று கடைசியாகக் கொஞ்சங் கடுமையைக் காட்டியே பேசினர்.

இந்திராணிக்கு முகம் சுருங்கிப் போய்விட்டது. அவள் அலுப்பாக, "எனக்கென்ன வந்தது? எப்படியாகிலும் போங்களேன்? இங்கு வந்திருப்பவர்கள் பேசிக்கொண்டது என் காதில் விழவே, நான் உன்னிடம் அதைச் சொல்ல வந்தேன்.—இப்போது கூட வேண்டுமானால் பாரேன் நான் சொல்வது உண்மையா? பொய்யா? என்று. கூடத்து மூலையில் நின்று கொண்டு இவ்வளவு ஜனங்கள் இருக்கிறார்களே என்று கூட இல்லாது அவர்கள் கூத்தடிக்கிறதை நீ நேரில் பார்த்தால் அப்போது உனக்குத் தெரியும். அவளுக்கு இப்போது அவனிடம் பேச்சென்ன வேண்டியிருக்கிறது? என்ன இப்படி குடிமுழுகிப் போகிற காரியம்!—இதெல்லாம் நான் எடுத்துச் சொன்னால், உனக்குக் கோபம் வருகிறது. உலகம் தெரியாதவள்; கர்நாடகம் என்றும் என்னைக் கேலி செய்கிறாய்!—மந்திரியாய் விட்டாயோ! இல்லையோ! எங்களை யெல்லாம் பார்த்தால் உனக்கு அலட்சியமாயிருக்கிறது.-உம். அவரவர்கள் தலையில் எழுதியிருக்கிறபடிதான் நடக்கும். மற்றவர்கள் சொன்னால் புத்தியில் அமையப் போகிறதா? நடக்கிறபடி நடக்கட்டும். நமக்கென்ன வந்தது" என்று கூறிய வண்ணம் கழுத்தை யொருதிருப்பு திருப்பிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நடக்கலானள். தான் இவ்வாறு கோபித்துக்கொண்டு திரும்பினால் காந்திமதிநாதம் தனக்குச் சமாதானஞ் சொல்லி வேண்டிக் கூப்பிடுவா

என நினைத்தாள். ஆனால் பிள்ளையவர்களோ தாம் அவளைக் கலியாணஞ் செய்து கொள்ளாததால் ஏற்பட்ட குரோதத்தை இன்னமும் மனதில் வைத்துக்கொண்டு, கார்த்தியாயினி மீது பொறாமையால் ஏதேதோ அபவாதங்கூற வந்திருக்கிறாள்; அவள் இயற்கை அவ்வளவுதான்' எனக் கருதி அலட்சியமாக இருந்து அவள் போவதைப் பார்த்தவண்ணமே சிரித்துக் கொண்டிருந்தார். எனவே, அவள் ஏமாற்றத்தோடு திரும்பினாள்.

* * *

அன்று மாலை நான்குமணி யிருக்கும். கலியாணத்துக்கு வந்த விருந்தினர்களில் விருந்துச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு தங்கள் வீடு சென்றவர்கள் போக, மற்றவர்களெல்லாம் அம்மாளிகையின் பல இடங்களிலும் உட்கார்ந்தும், படுத்தும் இளைப்பாறிக் கொண்டும், நாலைந்துபேர் நாலைந்து போகக் கூடி பேசிக்கொண்டும் இருந்தனர். ஸர். பரமேஸ்வரன் பிள்ளையும், காந்திமதிநாதம் பிள்ளையும் மேன்மாடியில் சோபாக்களில் சாய்ந்த வண்ணம் பலவித விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். அம்பிகாபதி இவர்களிடையே தளர் நடை நடந்தும், மழலை மொழி பேசியும் அவர்கள் கவனங்களைக் கவர்ந்து ஆனந்த மூட்டிக் கொண்டிருந்தான். மணமகன் நாராயண மேனன் மாளிகையின் ஓரிடத்திலும், மணமகள் தேவகி மற்றொரு அறையிலும் இருந்து தங்கள் மணவாழ்க்கையைப் பற்றியும், எதிர்காலத்தில் தாங்கள் அநுபவிக்கப்போகும் சுகபோகங்களைப் பற்றியும், இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தனர். இவ் இருவரையுஞ் சேர்ந்த உறவினரும், தோழர்களும் அவரவர்களைச் சூழ்ந்துகொண்டு, பரிகாசமாகப் பேசிக் கொண்டிருந்தனர். இவ்வளவு வைபவங்களிடையிலும், தேவகியின் மனதில் சிவசைலத்தைப் பற்றிய நினைவு அடிக்கடி தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அச் சமயங்களி லெல்லாம் அவள் உள்ளம் வேதனை யடைந்தது. இதைப்பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. தேவகி சிவ சைலத்தை எவ்வளவு நாட்களாக நேசித்து வந்திருக்கிறாள்? அவள் அவனை எவ்வளவு மனப்பூர்வமாக நம்பிக் காதலித்திருக்கிறாள்? அப்படி யிருக்க, அவனை அவள் இவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியுமா? கூடத்தில் மாலையில் நடக்கவேண்டிய சங்கீதக் கச்சேரிக்காக சிப்பந்திகளும், வேலையாட்களும் வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

நமது கதாநாயகன், கதாநாயகிகளாகிய சிவசைலமும், கார்த்தியாயினியும் எங்கே? மூன்று மூன்றரைமணி வரை வந்திருந்த விருந்தினர்களை உபசரித்துக் கொண்டிருந்த அவர்கள் இளைப்பாறுவதற்காக ஒருவர் பின் னொருவராக மாளிகையின் பின் பக்கத்துள்ள பூஞ்சோலைக்குச் சென்றனர். கார்த்தியாயினி தன் சகோதரரோடும், கணவரோடும் வார்த்தையாடி கொண்டிருந்துவிட்டு நந்தவனத்துக்குச் சென்றாள். அங்கு தற்செயலாகச் சிவசைலம் சந்தித்தான். இருவரும் அவ்வாறே பேசிக் கொண்டு, மற்றவர்கள் சாமானியமாக நுழைய முடியாத ஒரு தனி யிடத்தை யடைந்தனர்.

சிவசைலம் கார்த்தியாயினியோடு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், அவன் மனம் உள்ளூற என்னென்னமோ எண்ணிக் கொண்டிருந்தது. 'கலியாண வேலையோ அநேகமாக முடிந்து விட்டது. இன்னும் இரண்டொரு நாட்களில் நாம் ஊர் திரும்ப வேண்டி நேர்ந்தாலும் நேரும். இதற்குள், நம் அபிப்பிராயத்தை இது வரை மூடி மூடி வைத்திருந்தது போல் இல்லாது, தாராளமாக வெளியிட்டு அவள் சம்மதத்தை எப்படியும் பெற்று விட வேண்டும். அவளும் என்னிடம் அன்பு கொண்டிருப்பதாகத்தான் இந்த ஒரு மாதகாலமாக என்னோடு பழகிவரும் மாதிரியிலிருந்து தெரிகிறது. எதற்கும் மனம் விட்டுக் கேட்டு அவள் கருத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்வோம். அதற்கு இது தான் சரியான சமயம். இதை விட்டால் இதுபோன்று மறு சந்

தர்ப்பம் வாய்ப்பதரிது' எனத் தனக்குள்ளாகவே எண்ணி ஒருவித முடிவுக்கு வந்தான். எனவே, அவன் சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு, பேச்சோடு பேச்சாக, கார்த்தியாயினியை நோக்கி, "கார்த்திகா! எனக்கு என் வாழ்வெல்லாம் நீ தான். என் எதிர்கால வாழ்வு உன்னிடத்தில்தான் இருக்கிறது. நீ இல்லாது நான் உயிர்வாழ முடியாது. எனது இம் மனப்பான்மையை நீ ஆரம்பத்திலிருந்தே கவனித்து வந்திருப்பாயென நினைக்கிறேன்" என இரக்கமாகக் கூறினான். கார்த்தியாயினிக்குச் சிறிது தூரத்தில் நின்று இவ்வாறு கூறிக்கொண்டே வந்தவன் மனஎழுச்சியாலோ ஆர்வ மிகுதியாலோ, அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு முத்தமிடப் போனான்.

கார்த்தியாயினி தனக்குள்ள வரம்பையெல்லாம் மீறி சிவசைலத்தை முழுமனதுடன் காதலித்து வருகிறாளாயினும், இப்போது இவன் கூறிய மொழியைக் கேட்டதும் மன அதிர்ச்சி யடைந்தாள். இதே சமயத்தில் அவன் தன்னைச் சேர்த்தணைத்து முத்தமிட முயலவும், அவள் மெய் விதிர்ப்புற்று, தன் கைகளால் அவன் முகத்தை விலக்கி அவனது பிடியினின்று விடுபட முயன்ற வண்ணம், "நான் கலியாண மானவள். கணவனிருக்கிறார்; ஒரு மகனும் இருக்கிறான். இவ்வித நிலையில்.........." எனக் கூறி மேலும் ஏதோ பேச முயன்றாள்.

இச் சமயத்தில் மிகச் சமீபத்தில் ஏதோ சந்தடி யுண்டாகவே, ஒருவர் பிடியினின்று ஒருவர் விடுபட்டுத் தனித் தனியாகப் பிரிந்து வெவ்வேறு வழியாகச் சென்றனர்.

(தொடரும்.)

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

மிஸ். எம். எஸ். விஜயாள், மாஸ்டர் ராஜம்

இன்னும் இதர பிரபல நடிகர்களைக் கொண்டு

பூனா, சரஸ்வதி சினிடோனில்

அதியுன்னதமாக, ஏராளமான பொருட் செலவில் தயாரித்த

ருக்மணி கல்யாணம்

தாதாடூர்னே என்பவரால் மேற்பார்வையிட்டு
பாலச்சந்திர பெந்தர்க்காரால் டைரக்ட் செய்யப்பட்டது.

உங்களுடைய அன்பிற்குரிய சினிமாவில் கூடிய சீக்கிரம்
எதிர்பாருங்கள்.

—: தயாரித்தவர் :—

வெங்கடேஸ்வரர் பிலிம்ஸ், தஞ்சாவூர்

4-7-36-தேதிக்குள் வந்து சேரும் எல்லா விடைகளுக்கும் 4 அணா விலையுள்ள "குடும்ப வைத்திய பொக்கிஷம்" என்னும் புத்தகம் ஒவ்வொன்று அனுப்பப்படும்.

ரூ. 6000. ஆறாயிரம் ரூபாய்கள் 6000 ரூ.

1-ம் பரிசு ரூ. 4000. போட்டிப் பரிசு. 2-ம் பரிசு ரூ. 2000.

போட்டி எண் 3/35.

1. பாலப் பருவம்	ம — —
2. ஆடு	— — ம்
3. ஓர் சாதியார்	— — — ர்
4. எச்சில்	சே — ம்
5. மலை	—
6. காளி	— — ரி
7. யானை	க — —

பக்கத்து கட்டத்தில்—இம்மாதிரி கோடிட்டிருக்கும் இடங்களில் விடுபட்டிருக்கும் எழுத்துக்களைப் பூர்த்திசெய்து ஒரு விடைக்குப் பிரவேசக் கட்டணம் 8-அணாவுடன் 13-7-36-க்குள் வந்துசேரும்படி அனுப்பவேண்டும். (7 வார்த்தைகளும் சேர்ந்ததே ஒரு விடை) ரூ. 2-க்கு எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். காரியாலயத்தில் சீல்செய்து வைத்திருக்கும் விடைக்குச் சரியாய் அனுப்புவோருக்கு முதல் பரிசும், குறைந்த தவறுள்ள விடைகளுக்கு முறையே மற்ற பரிசுகளும் வழங்கப்படும். சகல விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. ரூ. 2-க்கு விடை அனுப்புவோர் கண்டுபிடித்த வார்த்தைகளை வரிசைக் கிரமமாய் எழுதி அனுப்பலாம். தனித்தனி கூபன் அவசியமில்லை. அனுப்பும் விடைகளுக்கு சரியான நகல் வைத்துக்கொள்ளவும். சந்தேகக் கடிதமெழுதுவோர் பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்புதல் வேண்டும். போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கெல்லாம் இராமசாமியும்-சதரும் என்னும் புத்தகம் ஒவ்வொன்று இனமாய் அனுப்பப்படும். எமது போட்டியில் கோர்வையாய் ஒவ்வொரு மாதமும் கலந்துகொள்ளும் அநேக மெம்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கம்ளீட் கட்டணம் 2 ரூபாயாக செய்துள்ளோம். பரிசு முடிவும், சரியான விடையும் 18-7-36-ந் தேதி எல்லோருக்கும் துண்டு பிரசுர மூலம் அறிவிக்கப்படும்.

மானேஜர்:—எஸ். நடேசன், தமிழ் வார்த்தை நிலையம், பெரம்பூர் பேரக்ஸ், சென்னை

காதலனா? காதகனா?

(நவரசந் ததும்பும் நவீனம்.)

'கண்டதும் காதல்!' 'கேட்டதும் காதல்!' என்றெல்லாம் மதிமயங்கிக் கெட்டலையும் வாலிபர்களுக்கு இவ்வற்புத மிகுந்த கற்பிதக் கதை தகுந்தவாறு புத்தி புகட்டி, உண்மைக்காதல் இதுவென உணர்த்துகிறது. கலாசாலை மாணவ மாணவிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் விபரீதப் போக்கையும் அதனால் அவர்கள் அடையும் சீர்கேட்டையும் இந்நூல் ஆசிரியர் அப்படியே தம் இனிய எளிய நடையால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இவ்வருமையான நாவல் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய அவசியம். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

இதன் விலை அணா 10 தான்.

குறிப்பு:—1936 வரு ஜூன்மீ 30-ந் தேதிக்குள் வாங்குபவர்களுக்கு மட்டும் இந்நாவல் எட்டணாவுக்குக் கொடுக்கப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

கூடியசீக்கிரம் சென்னைக்கு வரவிருக்கும் "ருக்மணி கலியாணம்"
தமிழ்ப் படத்தில் ருக்மணியாக நடிக்கும் ஸ்ரீமதி எம். எஸ். விஜயாள்.

காதற் கடிதம்

—:o:—

(அனந்தன்.)

நிசப்தமான அவ் விரவு அந்தகாரத்தில் மூழ்கி, டிக் டிக் என்று ஒலி உண்டாக்கும் லீலாவின் அறையிலிருந்த கடிகாரம் அதோடு போராடுவது போல் தோன்றியது. லீலாவின் மேஜையின் மீது பட்டம் பகலென விளக்கு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதனடியில் பிரிக்கப்பட்ட ஒரு காகிதத்தில் அவள் எழுதிக் கொண்டிருந்தாள். அப்பேனா எழுதும் சப்தம் கூட வெளியிலிருப்போர்க்குக் கேட்டுக் கொண்டிருந்ததால் அச் சமயம் இருந்த நிசப்தம் தெள்ளிதின் விளங்கும். அவளது முழுகவனமும் எழுதுவதில் முனைந்திருந்தது. அவ்வளவு ஊக்கத்துடன் ஓயா சலிப்புடன் தூக்கத்தையும் பொருட் படுத்தாமல் அவள் என்ன எழுதிக் கொண்டிருந்தாள். அது ஒரு கடிதம் போல் தோன்றியது. அச் சமயம் கடிகாரம் திடீரென பயமுறுத்துவது போல் சப்தித்து அடங்கி நடுநிசி யாகியதை தெரியப்படுத்தியது; ஆயினும் அதனுடைய மணி காட்டும் சலசலப்புக்கும் பயன் படாமலும் தயங்காமலும் பேனா சர சர வென்று ஓடிக் கொண்டிருந்தது.

டாக்கிக்குச் சென்று திரும்பிய சங்கரன் வீட்டினுள் நுழைந்து படுக்கையறைக்குச் செல்லும் போது தன் மனைவியின் அறையில் வெளிச்ச மிருப்பதையும் அவள் முனைந்து எழுதிக் கொண்டிருப்பதையும் மேலோடு திறந்திருந்த கதவின் மூலம் தெரிந்து, அவள் மீது இரக்கம் கொண்டும், "பாவம்; இந்த ஸ்கூல் உபாத்தியாயினி வேலையே இப்படித்தான்" என்று முண முணத்துக் கொண்டும் அவ்வறையில் நுழைந்து அவளை உபத்திரவிக்க மன மில்லாதவனாய் மெதுவாய் நடந்து சென்று அவள் பின்நின்ற சங்கரன் திடுக்கிட்டு ஒரு அடி பின் வாங்கினான். ஏன்? அவன் திருஷ்டி சடக்கென அவள் எழுதிக் கொண்டிருந்ததின் மேல் பட்டது தான். அவன் கண்டதென்ன? கண்ணைக் கசக்கிக் கொண்டு ஸ்தம்பித்து நின்றான். ஆம்! அது ஒரு காதற் கடிதம். அது அவனைப் பார்த்து பயங்கரமாக நகைப்பதுபோல் இருந்தது.

இவனது கோபமான மூச்சு லீலா வின் முதுகில் பட அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"ஆ! நீங்களா! டாக்கி எப்படி" என்று கேட்கும் போதே அவள் காம் தான் எழுதிக் கொண்டிருந்த கடிதத்தை பத்திரிகையினுள் சொருகியது. ஆனால் அதைக் கவனித்து விட்டான் சங்கரன்.

"லீலா! ஏன் இப்படி தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு மாடுபோல் உழைக் கின்றாய், மணி ஒன்று அடிக்கப் போகி றதே."

"உம்! பள்ளிக் கூட வேலை........ ....நாளண்ணிக்கு இன்ஸ்பெக்ஷன்—"

"பாவம், சரி படுத்துக் கொள்" என்று தன் கோபத்தையும் வெறுப்பை யும் அடக்கிக் கொண்டு தன் படுக்கைக் குச் சென்றாள்.

படுத்தால் தூக்கம் தான் வருகின் றதா! அக் கடிதம் மறு முறை அவன் மனக் கண் முன் தோன்றியது. சே! என்ன அநியாயம் அப்போது என் பாட்டி சொன்னது இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. "படிச்ச பெண்ணல்லாம் சுத்த வுதாரிடா! அவர்களை நம்பாதே" என்றாளே. அது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது. நாங்கள் காதல் மணம் புரிந்து கொண்டும் பயன் என்ன! முன்னமேயே ஒரு காதலனை பெற்றிருக்கி றாள். ஆம்! அக் கடிதத்தை அவனுக் குத்தான் எழுதி யிருக்கிறாள். இல்லா விட்டால் என்னைக் கண்டதும் மறைப்பா னேன்? பேபர் திருத்த வேண்டும் என்ற பொய் எதற்கு" என்று தன் மனதுடன் போராடினான்.

மணி மூன்றடித்தது. அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. பூனை போல் அவள் அறைக்கு நுழைந்தான். கடிதம் தற் செயலாக பத்திரிகையின் உள்ளேயே இருந்தது. அதை எடுத்து வந்து தன் அறை வெளிச்சத்தில் படித்தான். சந் தேக மில்லை. காதற்கடிதம். அத்துடன் அவளது போட்டோ பழையபடி இருந்த இடத்தில் வைத்து விட்டு உலவினான். அவன் மனம் நிம்மதியடைய வில்லை.

விடிந்ததிலிருந்து தம்பதிகளுக்குள் ஒற்றுமை இல்லை. உர் உர் என்று காரண மில்லாமல் மனைவிமீது சீறி விழுந்தான். அவளை அண்டிக் கேட்க மனமில்லாமல் கையுங் களவுமாகப் பிடிக்க வேண்டும் என்று உறுதியுடன் அவளைக் கவனிக்க லானான்.

ஒரு மாதம் கழிந்தது. ஒரு நாள் லீலாவுக்கு நூறு ரூபாய் மணியார்டர் வந்தது. சந்தோஷத்துடன் அதைப் பெற்றுக் கொண்டு லீலா தன் ஸ்நேகிதர் கள் வீட்டுக்குச் சென்று விட்டாள். சங்கரன் இவளது குதூகலத்தைக் கண்டு "சரிதான் காதலன் பணம் அனுப்பியிருக் கிறான்" என்று அவளைச் சபித்துக்கொண்டு அவள் அறையில் நுழைந்து தப்பு துலக்க எண்ணினான்.

ஒவ்வொரு இடமும் பார்த்து சாமான்களை குழப்பி, மேஜை நாற்காலி களை தடபுடலாக நகர்த்தியும் அவனுக்கு ஒரு தப்பும் துலங்க வில்லை. கடைசி யில் வேர்த்து வில விலத்து "அப்பாடா" என்று ஒரு நாற்காலியில் சாய்ந்தான். அச் சமயம் அவன் கண்கள் மேஜையின் மீது பிரித்து வைக்கப்பட்டிருந்த ஒரு பத்திரிகையின் பக்கத்தைக் கண்டன. உடனே துள்ளி எழுந்து அதைக் கையி லெடுத்தான். அதில்,

"காதல் கடிதம் போட்டியில் வெற்றி பெற்று 100 ரூபாய் பரிசு பெற்ற பெண் மணி. லீலா சங்கர்" என்றிருந்தது.

அதே சமயம், குறும்புப் புன்னகை யுடன் லீலா உள் நுழைவதைக் கண்ட தும் சங்கரன் ஓடோடியும் சென்று அவ ளது மன்னிப்பை, பவழ அதர முத்தால் பெற்றான்.

18631
DR. U.V.
BESANT N.

"சொர்க்கானுபவம்"

—(0)—

(ஆரியூர்- வ. பதுமநாப பிள்ளை.)

எங்கு நோக்கினும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒப்புயர்வற்ற அற்புதக் காட்சிகள்! சிற்ப வேலைப்பாடுகளில் மிக மிகச் சிறந்து உயர்ந்து விளங்கும் தங்கமயமான மாளிகைகள்! மாளிகைகளின் மாடிகளிலும் பூஞ்சோலைகளிலும் குதூகலமாக விளையாடிக் கொண்டிருக்கும் இளங்காதலர்களின் இன்ப—லீலைகள்! அவையனைத்தையும் பார்க்கப் பார்க்க, 'நாம் சொர்க்க லோகத்தில் இருக்கிறோம்' என்பது எனக்கு எளிதில் விளங்கிவிட்டது. அத்தகைய அற்புதக் காட்சிகளைக் கண்டு நான் பெரிதும் பிரமித்து நின்றபோது, உயர்ந்த உடையும் சிறந்த ஆபரணங்களும் அணிந்து புன்னகை ததும்பும் மலர் முகத்துடன் கூடியவர்களான சில தேவர்கள், என்னை நோக்கி வந்தனர். என்னிடம் வந்து நின்ற அத்தேவர்களெல்லோரும் என்னை நோக்கி, "ஜய விஜயீ பவ! ஜய விஜயீபவ!!"—என்று கூறி வாழ்த்தினர்; அவர்களில் ஒருவர் என்னை நோக்கி, "வரவேண்டும்! வரவேண்டும்!! தங்களைப் போன்ற தர்மாத்மாவை வரவேற்க, நாங்கள் மகத்தான பாக்கியம் செய்திருக்கவேண்டும். பூவுலகில் தாங்கள் செய்த மகத்தான தான-தர்மங்களின் பலன்களை அநுபவித்து ஆனந்திக்கத் தாங்கள் இங்கு விஜயம் செய்தது, எங்களுக்குப் பெரு மகிழ்வூட்டுகிறது"—என்று கூறி, என்னை அழைத்துச் சென்று நவரத்தினமயமான ஒரு சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். அப்போது, வாள்போன்ற நீண்ட கண்களை உடைய அப்ஸர மாதர்கள் வந்து என்னைச் சூழ்ந்து நின்றுகொண்டு, என்னை நோக்கிப் புன்னகை புரிந்தவாறே வெண்சாமரங்கள் வீசலாயினர். அந்த மெல்லிய காற்றின் சுகத்தை அநுபவித்துக் கொண்டிருந்தபோதே, மணம் பொருந்தி இனிமை கலந்த மெல்லிய இளந்தென்றற்

காற்றும் என்மேல் வந்து மிக மென்மையாக வீசத் தொடங்கியது. அவ்வேளையிலே, மின்னலைப்போல் உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கக் கூடியவாறு மிக மெல்லிய இடையை உடையவர்க

ளான தேவசுந்தரிகள், தங்களது உட்கருத்து வெளிப்படுமாறு முல்லையரும்புகளைப்போல் வெள்ளை வெளேலென்று விளங்கிய முத்துப் பற்களின் குளிரொளி என்மேல் வீசுமாறு புன் முறுவல் பூத்து நின்றனர்.

இளம் பெண்மானின் நோக்கைப் போன்ற அச் சுந்தரிகளின் நோக்கத்தில் ஈடுபட்டு உள்ளத்தைப் பறி கொடுத்து உணர்வழிந்திருந்த நான், கற்பகச் சோலைகளில் திரிந்து மலர் கொய்து விளையாட விரும்பியவர்களாய் அவர்கள் என்னை நோக்கிப் புன்னகை செய்கிறார்களென்று எண்ணியவனாய், சிங்காசனத்தினின்றும் எழுந்து அச் சுந்தரிகளுடன் சென்று எங்கும் தங்கமயமாக விளங்கிய கற்பகப் பூஞ்சோலையை அடைந்தேன். பூவுலகத்திலிருந்தபோது, 'பொன்மலர் நாற்றமுடையதுபோல்' என்று பண்டிதர்கள் உவமையாக எடுத்துக் கூறும் மொழியை, நான் பன்முறை கேட்டிருக்கிறேன்; ஆனால், அத்தகைய மலரை நான் என்றும் எங்கும் கண்டதேயில்லை. கண்ணுக்கினிய தங்க வண்ணமும் நாசிக்கினிய சிறந்த வாசனையும் ஒருங்கே அமைந்த பொன்மலர்கள் நிரம்பிய கற்பகச் செடிகளைக் கண்டவுடன், நான் அடைந்த வியப்பும் மகிழ்ச்சியும் எத்தகையவை என்பதை வர்ணிக்கக் கூடிய சக்தி எனக்கு இல்லை. வளம் பெற வளர்ந்து தழைத்துச் செழித்துள்ள பாரிஜாத மரங்களில் மலர்ந்திருந்த மண மலர்களிலிருந்த மகரந்தப் பொடிகளிலே படிந்து செந்தேன் அருந்தி மதிமயங்கிய அழகிய பொன்வண்டுகள், பல வகைப்பட்ட செவிக்கினிய சிங்காரப் பண்கள் பாடியவண்ணம் எங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்த காட்சி, என்னைப் பெரிதும் பரவசப்படுத்தியது. என்னுடன் ஆடிப் பாடி விளையாடிக் கொண்டிருந்த மனமோகன சுந்தரிகளின் மயில்தோகை போன்ற பலவகை மலர்கள் சூடிய கருங் கூந்தலின் அழகும், காதல் நோக்கை வெளிப்படுத்தி என்னைக் களிப்பெனும் கடலுள் மூழ்கச் செய்து எனது உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்ட நீண்டு குளிர்ந்த கருங்கயற் கண்களின் அழகும், மின்னலை யொத்த மெல்லிய இடையின் அழகும் எனது கண்களுக்கும் கருத்துக்கும் ஊட்டிய ஆனந்தம் எத்தகைய தென்பதை வர்ணிக்கக்கூடிய சக்தி எனக்கு இல்லை.

அத்தகைய ஒப்பற்ற அற்புத சுந்தரிகளுடன் பலவாறு நெடுநேரம் விளையாடித் திரிந்து கொண்டிருந்த நான், சற்று களைத்தவுடன் நவமணிமயமான ஒரு அற்புதமான மண்டபத்தை அடைந்து இளைப்பாறத் தொடங்கினேன். சிறந்த பேரொளி வீசும் நவமணிகள் பதிக்கப்பெற்ற சுவர்களை உடையதும்; மாணிக்கமயமான பூங்கொத்துகளால் ஆங்காங்கு அலங்கரிக்கப் பெற்றதும்; மின்னலைப்போல் பளபளவென்று குளிரொளி வீசும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட குறடுகளை உடையதும்; செக்கச் செவேலென்று சிவந்த சிறந்த பவழத்தினால் செய்யப்பட்ட அழகிய பவளத்தூண்களை உடையதும்; தங்கமயமான தளவரிசை செய்யப்பெற்றதுமான அந்த மணிமண்டபத்தைப் பார்க்கப் பார்க்க, என் மனத்தில் வியப்பும் களிப்பும் மேன்மேலும் பெருகலாயின. அவ்வேளையிலே, அழகிய அன்னங்களைப் போல் மெள்ள மெள்ள அசைந்து அசைந்து நடந்துவந்த சுந்தரிகள், என் எதிரில் அமர்ந்துகொண்டு அழகிய வீணையைத் தமது மணித்தோளில் சாத்தி மீட்டிய வண்ணமே, குயிலையும் வெட்கச் செய்யும் தங்களது ஜகன்மோகன சிங்காரக் குரலிலே, பலவகைப்பட்ட இன்ப கீதங்களைப் பாடத் தொடங்கினர். பூவுலகிலே, 'ச-ரி-க-ம-ப-த-நி' எனும் ஸப்த ஸ்வரங்களையும் பலவாறு சித்திரவதை செய்து உடலைப் பலவகைப்பட்ட கோமாளிச் சேஷ்டைகளுக்கு உட்படுத்திக்கொண்டு பாடப்படும் 'சங்கீத'த்தையும், 'ஹார்மோனியம்' முதலிய கர்ண—கடூரமான—அபஸ்வரக் களஞ்சியங்களான—வாத்தியங்களையும் கேட்டுக் கேட்டுப் பெரிதும் புளித்துப்போன எனது செவிகளில், அந்த சுந்தரிகளின் உணர்ச்சி ததும்பும் ஒப்புயர்வற்ற அற்புத வீணா—தேவகானம், சல

சல வென்று ஓடிவரும் இன்னமிர்தச் சிற்றருவியைப்போல் பாய்வதாயிற்று.

அவ்வாறு விஞ்ஞானம் கேட்டுக் களையாறியவுடன், அந்த சுந்தரிகளுடன் புறப்பட்டு, அழகிய நீலமேகங்கள் வந்து படியப்பெற்றதும் மோகனசந்திரன் வந்து தழுவி நின்று தனது குளிரொளியைப் பாய்ப நின்றதும் மின்னலைப் போன்ற பேரொளி பொருந்தியதுமான அற்புத மாளிகை யொன்றை அடைந்தேன். அம் மாளிகையின் மாடியின்மேல் கருமேகங்கள் வந்து படிவதனால் மந்தமான இருளும், சந்திரன் வந்து படிவதனால் குளிர்ந்த ஒளியும் ஒருங்கே கலந்து விளங்கின. அம் மாடியில் மாட்டித் தொங்கவிடப் பெற்றிருந்த என்றும் அணையாத-இரத்தின மயமான-சுடர்விளக்குகள், அழகுக்கு அழகு செய்வதுபோல் அம் மாடியின் இயற்கை யழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டின. அங்கு போடப்பட்டிருந்த நவமணிகள் பதிக்கப்பெற்ற தங்கக் கட்டிலின்மீது, பலவகை மலர்களும் அன்னப் பறவைகளின் வெண்மையும் மென்மையும் பொருந்திய அழகிய சிறகுகளும் பரப்பப் பட்டு, அதன்மேல் மெல்லிய பட்டுத்துணியும் விரிக்கப்பட்டிருந்தது. அப்போது, அவ்விடத்தைச் சுற்றிலு மிருந்த பொற் கதவுகள் தாமாகத் திறந்து கொள்ளவே, அவற்றின் வழியாக மெல்லிய இளம் பூந்தென்றற்காற்று நுழைந்து வந்து என் மேல் மென்மையாக வீசலாயிற்று. அத் தென்றற்காற்றுக் கள்வன் அவ் வேளையிலே அங்கு எவ்வாறு வந்தான் தெரியுமோ? மென்னடை யன்னங்கள் மிதித்ததனுலே நெரிந்து பொடிப் பொடியாய்ப் போன நீலோற்பல மலர்களின் மணம் மிகுந்த சின்னஞ்சிறு தாதுக்களைச் சூடிக் கொண்டும், மந்தார மரத்திலே நெருங்கி மலர்ந்து கீழே உதிர்ந்த மணம் மிகுந்த மலர்களை வாரி எடுத்துக்கொண்டும், அம் மலர்களிலுள்ள செந்தேனில் கொண்ட மையல் மிகுதியினலே அழகிய பொன் வண்டுகள் அம் மலர்களைத் தொடர்ந்து பறந்து வர என்னை யடைந்த அத் தென்றற்கள்வன், என்னிடம் சிறிதளவும் அச்சமில்லாமல், என்னருகி லிருந்த காதலிகள் தங்களது மார்பில் அணிந்திருந்த ஈரச் சந்தனக் குழம்பின்மேல் படிந்து அதனை உலர்த்தத் துணிந்தான். நான் அவர்களுடன் ஒரே படுக்கையி லிருக்கும்போது, என்னிடம் சிறிதும் அச்சமின்றி, அந்தத் தென்றற்கள்வன் என் கண்ணெதிரிலேயே எனது காதலிகளின் மார்பைத் தீண்டத் துணிந்ததைக்கண்டு கடுஞ்சினம் கொண்ட நான், அவனைப் பிடித்துத் தண்டித்து வெருட்டி யனுப்பிவிட முயன்றேன். ஆனல், அக் கள்வனே எனது கைப்பிடியிற் சிக்குபவனுக இல்லை. அதனல், மகிழ்ச்சிப் பெருக்கால் மலர்ந்திருந்த எனது முகத்தில், கடுஞ்சினம் தாண்டவமாடத் தொடங்கியது. அக் காட்சியைக் கண்ட என்னருகிலிருந்த சுந்தரிகள், தங்களது மின்னலைப் போன்ற மெல்லிய இடை ஒடிந்து விழுந்து விடுமோ என்று பெரிதும் அஞ்சமாறு, தங்களது இடையின்மேல் கையை வைத்துக்கொண்டு விழுந்து விழுந்து சிரிக்கலாயினர். அப்போது அந்த சுந்தரிகளின் பரிகாசச் சிரிப்பினுல் எழுந்த 'கல கல' வென்ற ஒலியும் அவர்களது மார்பகத்தில் விளங்கிய தங்கக்காசு மாலைகள் குலுங்குவதனல் விளைந்த 'கண கண' வென்ற ஒலியும் எனது முகத்தில் தோன்றிய சினத்தைத் தாக்கி யடித்துவிட்டு, எனது அகத்தைப் பெரிதும் உருக்குவனவாயின. ஆ! மருண்டு நோக்கும் இளம் பெண்மானின் நோக்கத்தைப் போன்ற அந்த நோக்கம்! எனது உயிரையும் உள்ளத்தையும் ஒருங்கே பரவசப்படுத்திய அந்த 'கல கல' வென்ற மோகனச் சிரிப்பு! அந்த மோகனச் சிரிப்பினல், பின்னும் சிவந்து விரிந்து ஒப்பற்ற அற்புத அழகு பெற்று விளங்கிய அந்த செந்தாமரை யிதழை யொத்த செவ்விய இதழ்கள்! அவையெல்லாம் எனது விழிகளின் வழியே எனது மனத்திற்குள் நுழைந்த, இன்னதென்று விவரிக்க இயலாததொரு வெறியை எழுப்பி விட்டுவிட்டன. அதன் பயனக, நான் என்ன செய்கிறே னென்பதை நானே உணராமல், அச் சுந்தரிகளுள் ஒருத்தி

யின் செங்கனிவாயினருகில் எனது முகத்தைக் கொண்டுபோய் வைத்து, அவளது செம்பவள இதழ்களில் ஒ....ஒரு....ஒரு முத்தம் வைக்க முயன்றேன்.



அந்தோ! என்ன மாயம்! எதிரிலிருந்த வனைத்தும் திடீரென்று மாயமாக மறைந்து போய்விட்டன! எனது உடம்பில் தாங்க முடியாத வேதனை உண்டாயிற்று. கண்களை விழித்துப் பார்த்ததில், நான் கட்டிலிலிருந்து புரண்டு தரையில் விழுந்து விட்டதை உணர்ந்தேன். எனது 'சொர்க்கானுபவம்' வெறும் கனவாய்ப் போய்விட்டதை உணர்ந்தும் கட்டிலிருந்து விழுந்ததால் உண்டான வலியைப் பொறுக்க முடியாமலும் நான் பெரிதும் வருந்திக்கொண்டிருந்தபோது, சாக்ஷாத் காளிதேவியைப் போன்ற கருநீலநிறமுடைய எனது 'இல்லற தேவதை' கருப்புப்புடவை உடுத்தி சாணிச்சட்டியும் விளக்குமாறும் ஏந்திய கரங்களுடன் 'கலகல' வென்று பயங்கரமாகச் சிரித்து நின்ற காட்சியைக் கண்டவுடன், எனது மனத்தில் என்னென்ன எண்ணங்கள் தோன்றியிருக்கக் கூடுமென்பதை வாசக நேயர்களே ஊகித்துக் கொள்ளவேண்டும்! 'சொர்க்கானுபவ'த்தைக் கனவிலாவது அறிந்து மகிழக் கூடிய மகத்தான பாக்கியத்தை எனக்கு விளைவித்த திருமங்கையாழ்வார் அருளிச்செய்த 'பெரிய திருமடல்'—எனும் சிரியநூலை, படுக்கையில் கிடந்த தலையணையின் கீழிருந்து எடுத்துக்கொண்டு, ஆற்றை நோக்கிப் புறப்பட்டேன்.

———



மோதிரக் களவு

—:(0):—

(ஸ்ரீமதி அம்புலு அம்மாள்.)

I

சாமாவையரும், ராஜமும் ராதையின் கல்யாணம் நடந்த மறுநாள் இரவே மாயவரம் போகப் புறப்பட்டார்கள். சாமாவையருக்கு, மறுநாட் காலையில், கட்டாயம் ஆபீஸிற்கு செல்ல வேண்டும். ஆகவே அவர்களிருவரும், இரவு 12 மணிக்கே, விழுப்புரம் பிளாட்பாரத்திற்கு வந்து விட்டார்கள். பாசஞ்சர் டிரயின் வருவதற்கோ இன்னும் 2 மணி சாவகாச மிருக்கிறது.

இருவருக்கும் உறக்கமும், அலுப்பும் அசாத்தியமா யிருக்கிறது. காரணம் கல்யாண அலைச்சல்களும். தூக்கமின்மையும் தான். இருவரும் படுத்துறங்கி விட்டால், டிரயின் தப்பிப்போய் விடுமென்னும் பீதியும், திருடர்களின் பயமும் இவர்களுக் குண்டு.

ஆகவே, ஸ்ரீமான் அய்யரும், ராஜமும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள்:—சாமாவையர் டிரயின் வருகிற வரையில் தூங்குவதும், ராஜம் பெட்டிகளைக் காத்துக் கொண்டு, டிரயின் வந்தவுடன், அய்யரை எழுப்புவதும், (2) டிரயின் வந்த பிற்பாடு, டிரயினில் ராஜம் தூங்க, ஐயர் காவலிருந்து மாயவரத்தில் எழுப்பி, இறங்குவதென்பதும்.

ராஜத்திற்கு இந்த ஏற்பாடு மிகவும் பிடித்திருந்தது. ஏனென்றால், தான் தனது பர்த்தாவை விட அதிக நேரம் உறங்கக் கூடுமல்லவா?

உடனே சாமாவையரும் தனது படுக்கையை விரித்துக் கொண்டு, பெட்டிகளை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ள ராஜத்தினிடம் எச்சரிக்கை செய்து விட்டு, உறங்கி விட்டார். ராஜம் ஒரு கால் மணி நேரம் பார்த்தாள். தூக்கமோ கண்ணைச்

சுற்றுகிறது. பக்கத்திலிருந்த "பொற்றெடி" எனும் நாவலை மறுபடியும் பார்வையிடத் தொடங்கினாள். மனம் அதிலும் நாடவே யில்லை. பின் சற்று நேரம் எழுந்திருந்து நின்று கொண்டாள். அதுவும் சரிவர வில்லை. ஐயரோ நன்றாய் குறட்டைவிட்டு உறங்குகிறார்! உடனே ஓர் யோசனை ராஜத்திற்கு உதித்தது. ஐயாது ஜேபியில் கையை நுழைத்துப் பார்த்தாள். எடுத்துக் கொண்டாள்—சரி, இருக்கட்டும்—என்று தன் மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

II

கடைசியாக $1\frac{1}{2}$ மணி ஆயிற்று. பாசஞ்சர் டிரயினும் வந்து சேர்ந்தது. ஐயரை எழுப்ப சரியாக ஐந்து நிமிஷங்கள் பிடித்தது ராஜத்திற்கு. பிறகு பெட்டி படுக்கைகளை சுருட்டி வாரி எடுத்துக் கொண்டு தம்பதிகளிருவரும், வண்டியில் ஏறினார்கள். அன்று ராஜம் நற்காலமோ என்னமோ! வண்டியில் ஜன நெருக்கடி அதிக மில்லா திருந்தது. ஆகவே சாமாவையரும் ராஜமும் தனி சீட்டு (Seat) ஒன்றில் சுகமாக அமர்ந்தார்கள்.

வண்டியும் புறப்பட்டது. இப்பொழுது ராஜத்தின் டர்ன் (Turn) அல்லவா? ராஜமும் நித்திரா தேவியை வரவேற்றாள். ஸ்ரீமான் அய்யரும் ராஜத்தின் தலைப்புறத்திலிருந்து கொண்டு, ஹிந்து பத்திரிகையைப் பார்த்த வண்ணமாய், அவருடைய உடன் படிக்கையை கையாண்டு வந்தார். சட்டென்று கீழே குனிந்து பார்க்க அவளது மணிபர்ஸ் கிடந்தது—வெகு ஆவலுடனும், தந்திரமாகவும் அதைத் திறந்து பார்த்தார். ரூபாய்கள், சில்லரைகளுடன் ஒரு கனத்த வஸ்து கிட்டியது. அதிக சந்தோஷத்தோடு அவ் வஸ்துவை மட்டில் எடுத்துக் கொண்டு, மணி பர்ஸை திரும்பவும் ராஜத்தின் கையிலேயே சேர்த்து விட்டார்.

III

மறுநாள் காலை ஆறு மணிக்கு ராஜமும், சாமாவையரும், மாயவரத்திலிறங்கி, ஓர் குதிரை வண்டி யமர்த்திக் கொண்டு வீடு போய் சேர்ந்தார்கள்—அன்று பகல் சாமா அய்யர் ஆபீஸ் சென்று விட்டார். ராஜமோ! ஒரு வாரமாக தூசி படிந்து கிடக்கும் வீட்டையும், பாத்திர, படங்களையும் சுத்தி செய்து, சரிவர அமைப்பதிலேயே பகலைப் போக்கி விட்டாள்.

சாயங்காலம் 5 மணிக்கு ஐயர் ஆபீஸிலிருந்து வீடு திரும்பினார். ராஜமும், பக்தி சிரத்தையுடன், அவரை வரவேற்று ஒரு தட்டில் கொஞ்சம் பலகாரமும், கூஜாவில் காப்பியும் கொணர்ந்து வைத்து அவரெதிரில் நின்று கொண்டாள். ஐயரும் அவளை ஓர் முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "ஏண்டி! கைமோதிரம் எங்கேயடி ?" என்றார்.

அப்பொழுது தான் ராஜம் தன் கையைப் பார்த்தாள்.

என்ன செய்வாள் பாவம்! வைத்த இடம் மறந்து விட்டாள்—பெட்டி முதல் கடுகு, வெந்திய டப்பாக்கள் வரை ஒன்று விடாது தேடியாகி விட்டது.

சாமாவையரோ!-தொடாலி! தூங்குமூஞ்சி! கழுதை! யென்று சாமாரியாக வசைகளைப் பொழியத் தொடங்கி விட்டார்.

குற்றம் தன் பேரிலிருக்கும் பொழுது, ஐயரைக் கோபித்துக் கொண்டு என்ன செய்வது? மேலும் தனது பர்த்தாவையும் (Trot) திராட்டில் வாங்க தனக்கும் ஒரு சான்ஸ் (Chance) இருக்கிற தல்லவா? என்று ராஜம் அவ்வளவு வசைகளையும் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டாள்.

VI

(தான் செய்த பெரிய, வீர, தீர, தந்திரங்கள் நன்றாய் பலித்து விட்ட தென்னும் உவகையும் பெண்கள் பேதைகள் என்பதைக் கண்டறிந்து கொண்டோம் என்பதும் ஐயருக்கு மிகுந்த சந்தோஷத்தை யளித்தது. இரவில், (தனது வசை மொழிகளை அடக்கினவாய்) போஜனஞ்

செய்த பின் தாம்பூலம் தரித்தவராய் சாய்வு நாற்காலியில் அமர்ந்தார் மன உவகையுடன்.

"ஆமாம்! உங்கள் கைமோதிரம் எங்கே!" யென்றாள் திடீரென அவர் முன் தோன்றிய ராஜம்!

தூக்கி வாரிப் போட்டது ஐயருக்கு. உடனே தனது சட்டை பாக்கட்களையும் டேபிள், வேஸ்ட் பேப்பர் பாஸ்கட்களையும் ஜப்தி செய்தார் ஐயர்!

"கல்யாணத்தில் ரங்கு ஆடி தோற்றீர்களோ! இல்லையேல், வேறே யாரோனுமொரு பெண்ணிற்கு ஆசையாய் கொடுத்து விட்டீர்களோ! உங்களுக் கெல்லாம் மோதிரம் எதற்கு?' என்று கொஞ்சம் கடுமையாகவே நலங்கு பத்தியத்தை? ஆரம்பித்தாள். காரணம் என்ன? தன்னை அவர், மாலையில் செய்த அவமானமே!

தானே ஏமாந்தவாயிருக்கையில் வீணாக, ராஜத்தை அதிக தூரம் வைதது தப்பு என்பது அப்பொழுது தான் சாமா ஐயருக்கு புலப்பட்டது. மேலும் பெண்களும் அறிவுள்ள தந்திரசாலிகள் என்பதும் தெரியலாயிற்று. ஆகவே தான் விளையாட்டாகச் செய்த கொடும் தந்திரத்தை பாராட்டியவராய்,

"கண்ணே! நான் உன்னை வைதெல்லாம் தப்பு. மறதியும் தோற்கடிப்பதும் எல்லோருக்கும் சகஜம். நான் ஒரு மோதிரத்தை தோற்றேன்! நீ ஒன்றைத் தோற்றாய்! ஆகவே, இது நம்மிருவரில் பரஸ்பரமாயிருக்கட்டும். கோபித்துக் கொள்ளாதே கண்ணே! ராஜம்! எங்கே உன் கையைக் கொடு!"

என்ன ஆச்சரியம்! என்னே விந்தை!! சாமாவையருடைய மோதிரம் ராஜத்தின் கையில்! ராஜத்தினது, சாமாவையரிடத்தில்!!!

அப்பொழுது தான் ராஜம், தான் கல்யாணத்தின் மூந்திய நாள் எண்ணெய் ஸ்நானம் செய்யச் சென்ற பொழுது மணிபர்ஸில் கழற்றி வைத்த மோதிரத்தின் ஞாபகமும், சாமாவையர் தான் விழுப்புரம் ஜங்ஷனில் கூட்டத்தில் டிக்கட் வாங்கச் சென்ற பொழுது (கொஞ்

ரேஸ் டிராமா

—:(0):—

(கே. அநந்தநாராயணன்.)

நாடக பாத்திரங்கள்.

க. கா. கி கூ. கெ. கே. செட்டியார்:—ஓர் நெய் வியாபாரி.

வேலு நாயுடு:—செட்டியாரின் தோழர்.

ரங்கஸாமி அய்யர்:–பல வருடங்கள் ரேஸ் அநுபவம் பெற்றுக் குதிரைகளின் சரிதங்களைத் தலைகீழாய் ஒப்பிக்கும் ஓர் கிழவர்; செட்டியாரின் தோழர்; கந்தக் கடவுளின் பக்தர்.

குப்புசாமி ஐயங்கார்:–ஓர் ஜோஸியர்.

குருசாமிக் குருக்கள்:—ஓர் சுப்பிரமணிய கோவில் அர்ச்சகர்.

அப்துல்:—ஓர் துலுக்க நண்பர்.

துரைசாமி:—ரங்கசாமி அய்யர் பேரன்.

சாரா, மாலி:—ரங்கசாமி அய்யரின் பேத்திகள்.

[இனி நாடகம் ஆரம்பமாகிறது.]

காட்சி. I

காலம்:—வெள்ளிக்கிழமை மாலை 3-மணி.

இடம்:–செட்டியாரின் நெய்க்கடை.

செட்டியார்:—நாளைக்கு ரேஸாமே?

ரங்கசாமி அய்யர்:—ஆமாம், இதோ பாருங்கோ நீங்கள் 'ரேஸ்' என்று சொல்றத்துக்குள்ளே, எண்ணெய்க்குமுன் என்

சம் நழுகலாக இருந்தபடியால்) மோதிரத்தைப் பாக்கட்டில் கழற்றிப் போட்டுக் கொண்டதும் மனதிலுதித்தது.

"ராஜம்! 'மர்ச்சண்ட் ஆப் வெனிஸி'ல் ரிங் எபிசோட் படித்திருக்கிறாய் அல்லவா நம்முடையவும் அதேமாதிரி Ring Episode என்று நினைத்துக் கொள் என்று ஓர் சூடான முத்தம் கொடுத்தார் ஐயர்.

ளாக, "வாள் ரேஸிங் சாம்பியன்" வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன்.

அப்துல்:—அய்யரு நம்பள்கி ரொம்ப நல்லது பண்ருரு, அச்சா!

வேலு நாயுடு:—(வாயிலுள்ள வெற்றிலைப் பாக்கை மென்று துவம்சம் செய்து கொண்டே) ஓய்! எ-ழ்-ன்ன குழ்-தினை, வி--ழ்--ன் (Win=ஜயம்) அ—ழ்—டிழ்-க்குமோ?

அய்யர்:—முதல் பந்தயத்தில் 'அப்துல்' என்ற குதிரை வின் வரும் போலயிருக்கு.

அப்துல்:—அச்சா அச்சா! குதிரைக்கும் நம்பபேர்தான் இருக்கான். அவன்தான் வின் பண்வான்.

செட்டியார்:—சாயபோ! நீர் சொன்ன வாய்க்கு என் கடை செய்தான் போடணும். (அய்யரிடம் திரும்பி) ஏன், ஸார்? இரண்டாவது ரேஸில் எது ஜயிக்கும்னு தோன்றது?

நாயுடு:—நான் சொல்றேன், 'காஜி பெக்' (Gaz Beg) இருக்கே, அதுதான் வின்!

செட்டியார்:—அய்யர்வாள்! உமக்கு என்ன தோன்றது?

அய்யர்:—காஜிபெக் வரலாம். ஆனல் ஸார், அது ரொம்பத் தாழ்ந்த சாதி. 'முஷ்கூர்' (Mush Koor) இருக்கே, அது ரொம்ப உயர்ந்த குதிரை, பஷ்டு கிளாஷ்!

நாயுடு:—ரொம்ப சரட்டு! ஆனுக்கே அந்தக் குதிரை மேலே பாரம் ஜாஸ்தியா ஏற்றிருக்கான். போறது, ஜாரா (Jarra) என்னும் குதிரையைப் பார்த்தியளா?

அப்துல்:—நம்பள்கி, ஜாராதான் ஜோராய் வின் அடிப்பான்னு தோண்ருன்!

செட்டியார்:—அய்யர்வாள், உமது எண்ணம் எப்படி?

அய்யர்:—போய்விட்டு வரேன். பாக்கி ரேஸ்களில் வின் அடிக்கும் குதிரைகளை இன்றிரவு செலக்ட் (Select) பண்ணி நாளைக் காலை சொல்றேன்.

செட்டியார்:—ஆ, அப்படியே, தங்களிஷ்டம்!

[கூட்டம் கலைகிறது.]

காட்சி. II

காலம்:—வெள்ளிக்கிழமை மாலை 7-மணி.

இடம்:—அய்யரின் கிரகம்.

பாத்திரங்கள்:—ரங்கசாமி அய்யர், குப்புசாமி அய்யங்கார் முதலானோர்.

ஐயங்கார்:—ரங்கஸாமி அய்யர்வாள்! என்ன, பார்த்தேளா ஏதாவது?

அய்யர்:—பஷ்டு ரேஸில் 'அப்துல் ராஜாக்' வின்; இரண்டாவதில் 'ஜாரா'; உங்கள் ஜெலக்குஷன் எப்படி?

ஐயங்கார்:—உங்கள் Choosig (பொறுக்கி யெடுத்தல்) சரியேயில்லை, சார். ஜாராவாவது, வின் அடிக்கவாவது! ஏன் வின் அடிக்காதுன்னு கேழக்கறையளா? இப்போ ஜாரா தலைக்கு நேரே சனி இருக்கான். சனிக்கிழமை போன்னே நாளைக்கு? சனிக்கிழமை அந்த ஜாராவை சனி ஆட்டிவைக்கருன். அதனல் குதிரை வின் அடிக்கறது ரொம்ப ரொம்ப கஷ்டம் சார். புரிஞ்சதா, ரங்கசாமி அய்யர்வாள்?

அய்யர்:—ஊம்; பின்னை எது வரும் என்கிறேள்?

ஐயங்கார்:—முஷ்கூர்தான்.

அய்யர்:—ஊஹூம். பாரம் ஜாஸ்தி. ஏறும் ஜாக்கி ஊஷ்லெஷ்! (Useless—பிரயோஜனமில்லை)

ஐயங்கார்:—அப்படியா சொல்றேள்? இப்போ மூஷ்கூர் தலைக்குமேலே சுக்ரன் வரான். சுக்ரன் உச்சியி லிருந்தால் குதிரைக்கு தசை நன்று அடிக்கும். அல்லது சுக்ரன் வக்ரமாய்ப் போயுடும். சொல்ல முடியாது, ஸார். அது போகட்டும், நூற்றென்பதே காலனைக்காலுக்குக் கீழே ஒரு நம்பர் சொல்லுங்கே.

அய்யர்:—இருநூற்று ஐம்பது.

அய்யங்கார்:—நூற்றெட்டே காலைக்காலிருந்து எாநூத்தம்பது போனல்

மூன்னூறு. அத்தடன் அஞ்சைக் கூட்டினு எழுவத்தாறு. எழுவத்தாறுலே என்பது போனல் எட்டு—ஸார், பார்த்தேளா, நம்பர் 8 ரொம்ப நல்லது. வின் மூஷ்கூர் தான்! என்ன இருந்தாலும் ஜோஸ்யம் பொய்பாகுமா, ஸார்? அடுத்த ரேஸில் என்ன ஸெலக்ஷனே?

அய்யர்:—இனிமேத்தான் செலக்ஷன் செய்யணும்.

ஐயங்கார்:—செலக்ட் பண்ணி வையுங்கோ. என் ஜோஸ்யத்திற்கும் உங்கள் செலக்ஷனுக்கும் ஒற்றுமை பார்க்கலாம்.

அய்யர்:—ஆஹா!

காட்சி. III

காலம்:—சனிக்கிழமை காலே 6 மணி

இடம்:—சுப்பிரமணியர் கோவில்

பாத்திரங்கள்:—அய்யரும் குருக்களும்.

அய்யர்:—சிவசுப்ரமணியம், ஓம் சிவசுப்ரமண்யம், ஓம் சிவசுப்ரமண்யம், ஓம் சிவசுப்ரமண்யம், ஓம் சிவசுப்மண்யம்....

....

குருக்கள்:—அய்யர்வாள்!

அய்யர்.—ஓம் சிவசுப்ரமண்யம்!

குருக்கள்:—உங்களைத்தான், ஸார்.

அய்யர்:—ஓம் சிவசுப்ரமண்யம்!

குருக்கள்:--என்ன ஒரே சிவப்பழுமா யிருக்கயள்? இன்னிக்கு ரேஸாமே? இப்படி பக்திப் பாவசக் கடலில் மூழ்கிவிட்டால், யார் கரையேற்றி உங்களை ரேஸ் நடக்குமிடத்திற்குக் கொண்டு போவார்? இந்தாங்கோ, நான் அஞ்சு ரூபா கொடுக்கறேன். வந்தா பங்கிட்டுத்தரேளா?

அய்யர்:—(பணத்தை வாங்கி இடுப்பில் செருகிக்கொண்டு) ஊம்; சிவசுப்ரமண்யம். அப்படியே!

குருக்கள்:—என்ன ஸார்?

அய்யர்:—சரி, நீங்கள் எங்கிட்டே அஞ்சு கொடுத்திருக்கேள். சாயபு, செட்டியார், நாயுடு தலைக்கு அஞ்சு ரூபா எங்கிட்டே தந்திருக்கிறார்கள்; என் பணம் அஞ்சு ரூபாய். ஆக இருவத்தஞ்சு எங்கிட்டே இருக்கு. இன்னிக்கு இந்த இருவத்தஞ்சை வைத்துக்கொண்டு ஆடுவதில வந்ததை அஞ்சு பேரும் சமமாய்ப் பங்கிட்டுக் கொள்ளவேண்டியது.

குருக்கள்:—இந்தாருங்கோ விபூதி, இதை இட்டுக் கொண்டால் பூரண ஜயம்.

அய்யர்:—ஓம் சிவசுப்ரமண்யம், ஓம் சிவசுப்ரமண்யம், ஓம் சிவ..................

[விபூதி வாங்கிக் கொள்ளாமலே வெளியேறுகிறார்].

காட்சி. IV

காலம்:—சனி பகல் 12-மணி.

இடம்:—செட்டியார் கடை.

செட்டியார்:—யார் நம்மவர்களுள் இன்று ரூபா இருபத்தஞ்சையும் எடுத்துக் கொண்டு ரேஸ் ஆடுவது? நானே கடையைக் கவனிக்கவேண்டும்.

அப்துல்:—நம்பள்கி ரொம்ப வீட்டு வேலே. இருக்கான். ரேஸுக்குப் போய் ஆடறது எனக்குக் கஷ்டமாயிருக்கான்.

நாயுடு:—நான் இன்னைக்கு டவுனுக்குப் போய் இரண்டு நல்ல செருப்புகள் வாங்கணும் என்றால் கூட..................

அய்யர்:—சரி. எனக்கு ஒரு வேலேயும் கிடையாது. நான் போய் ஆடிவிட்டு வரேன்.

செட்டியார், நாயுடு, அப்துல் (ஒருமுகமாக):—ரொம்ப நல்லது, ரைட்டு, அச்சா!

செட்டியார்:—இங்கே செலக்ட் பண்ணினதையே அங்கும் போடுங்கள். மாற்றவேண்டாம்.

அய்யர்:—ஆஹா......................

[வெளியேறுகிறார்].

காட்சி. V

காலம்:—சனி மாலே 7-மணி.

இடம்:—அய்யரின் அகம்.

பாத்திரங்கள்:—சாரா மாலி, துரை சாமி.

சாரா:—என்னடா துரை! தாத்தா இனி மத்யானம் 12-மணியிலிருந்து கண்ணில் படவேயில்லே?

துரைசாமி:—அட பைத்தியமே! இதுகூடவா. தெரியவில்லே? இன்னிக்கு என்ன கிழமை, தெரியுமா?

மாலி:—சனிக்கிழமை யோன்னே? கிண்டிக்கு ரேஸ் ஆட 'ஜில்'னு போயிருப்பார்.

சாரா:—ரேஸுக்குப் போனவாள் ளாம் ஆறுமணிக்கே வந்துட்டார்களே? மணி ஏழாச்சு, இன்னும் தாத்தா வரலேயே?

துரை:—ஒரு வேளை-அவர் ஏறின ரயில் வண்டி இன்னும் நகரவில்லேயோ, என்னமோ?

மாலி:-என்னடா, அவருக்கும் அவர் ஏறின வண்டிக்கும் என்ன சம்பந்தம்?

துறை:—தாத்தா ஒரு பெரிய மூட்டைப் பணம் ரேஸில் சம்பாதிச் சிருப்பார். அம் மூட்டையை ரயில் வண்டியாலேயே இழுக்க முடியாமல்...........................

சாரா:—என்ன விகடம் வேண்டிக் கிடக்கு? பக்கத்துத் தெரு ஜோஸ்யர் வந்துவிட்டாரா?

காட்சி. VI

காலம்:—இரவு 7-மணி.

இடம்:—செட்டியார் கடை.

செட்டியார்:—என்ன, போன ஐயர் இன்னும் வரலியே?

நாயுடு:-நூறு ஆயஸு அய்யருக்கு! அதோ இப்பத்தான் வரார், முகத்தில் மூணும் பேஸ் தோடே!

அய்யர்:—செட்டியார்வாள்! முதல் ரேஸில் நம்ப செலக்ட் பண்ணின ரெண்டு குதிரைகள் மேலும் பணம் கட்டினதில், நாலு ரூபா காலி!

செட்டியார்:—அப்புறம்?

அய்யர்:-இரண்டாவதில் ஆறு காலி.

அப்துல்:—பூட்டானே!

அய்யர்:—அப்படி இப்படி கட்டி பதினஞ்சு ரூபாயோடு திரும்பி வந்தேன்.

நாயுடு:—பத்து ரூபாய் போச்சா? ஆளுக்கு 2 ரூபாம் நஷ்டம் ஈஸ்வரா!

அப்துல்:—பாவமில்லே. அல்லா இருக்கார்.

செட்டியார்:-தலைவிதி; அய்யர்மேல் தப்பிதமில்லே. சொன்ன குதிரைகளைத் தான் போட்டிருக்கார்.

ஐயர்:—சரி, அடுத்த ரேஸில் ஒரு ஜான்ஷ் (Chance—முறை) பார்க்கலாம்.

காட்சி. VII

காலம்:—சனி இரவு 7-மணி.

இடம்:—சுப்ரமண்யர் கோவில்.

பாத்திரங்கள்:—அய்யர், ஜோஸ்யர், குருக்கள்.

ஜோஸ்யர்:—பார்த்தியளா, ஸார், மூணாவது ரேஸில் 'சார்லி' (Charlie) வின் பண்ணும் என்றேன். அது வின் வந்துவிட்டது. பணமும் குறைச்சலா? கட்டியிருந்தால் பணம் ஏழாயிரம் கைமேலே ஸார்!

அய்யர்:—நீங்க அதன் மேலா, ஸார், கட்டினேள்?

ஜோஸ்யர்:-அதுதானே ஸார் இல்லே! அவசர அடியில் அதன் தலையில் சுக்ரன் இருந்ததைக்கூடக் கவனிக்கவில்லே. போச்சு, ஸார், போச்சு! ஏழாயிரம் போச்சு!

அய்யர்:—என்ன ஸார், ஏழாம் நம்பர் குதிரையை எடுத்தேன். எட்டாம் நம்பர் வின் அடித்தது.

ஜோஸ்யர்:-நம்பர் 8 நல்லது என்று காலையில் சொன்னதைக் கேட்டியளா, ஸார்? எல்லாம் ஜோஸ்யத்தின் படிதான் ஸார்!

[குருக்கள் வருகிறார்].

அய்யர்:—இந்தாருங்கள் 3 ரூபாய்.

மனோரஞ்சிதம்

"ரோஜா"

விசுவாமித்திரரது அரியதவம் மேனகையிடம் நின்றதா? "பெண்ணென்றால் பேயு மன மிரங்கும்" என்று கூறிய பெரியார் வாக்கு பிசகாகுமா? எத்தனையோ பெரிய பெரிய துறவிகளெல்லாம் பெண்ணாசையை ஒழிக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள்? சத்திய சீலர்கள் வாழ்ந்த அக்காலத்திலேயே அப்படி இருந்ததென்றால், இக் காலத்தில் சொல்லவா வேண்டும்?

* * *

வக்கீல் கிட்டுவய்யர் பெரிய 'ஷோக்' பேர்வழி. அவருடைய நண்பர்கள் அவரை "பிராமண குலத்தில் தப்பிப் பிறந்தவர்" என்பார்கள். வைதீகம் என்பது அவரிடத்தில் மருந்துக்கும் காண முடியாது. இதோடு கூட காமாந்தகாரத்தைத் தம் வாழ் நாளில் பெருங் கடமையாகக் கொண்டவர். இதோடு நிறுத்திக் கொள்ளலாம் இவருடைய வாலாற்றை.

* * *

மனோரஞ்சிதம் என்னமோ கலியுக மேனகை தான். அவளழகைப்பற்றி யாரும் குறை கூற முடியாது. கிட்டுவய்யர் அவளுடன் ஒட்டிக் கொள்ள பட்ட கஷ்டம் மட்டில்லாதது. அவர் அவளை ஒரு நாளாவது பார்க்காம லிருக்க மாட்டார். அங்கு போகும் போதெல்லாம் தன் தர்ம பத்தினியிடம் அங்கு போகிறேன் என்று ஏதேதோ சாக்கு போக்கெல்லாம் கூறிவிட்டுப் போவார்.

ஒரு நாள் அவருடைய தர்மபத்தினி "நாளைக்கு சிந்தாதிரிப் பேட்டைக்குச் சென்று, என் அண்ணனைப் பார்த்து விட்டு வருகிறேன். நம்ப குழந்தை இருக்கா, அவனைப் பார்த்துக் கொங்கோ!" என்றாள். அய்யரும் "அப்படியே செய்!" என்று சொல்லி விட்டு, வீட்டை விட்டு வெளிக் கிளம்பினார்.

* * *

இரவு, ஒன்பது மணி யிருக்கும். அய்யர் சிகரெட் பிடித்த வண்ணமாய், ஒரு சோபாவில் அமர்ந்து, மனோரஞ்சிதத்தின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். மாலை ஆறு மணியிலிருந்து, தன்னை அலங்கரித்துக் கொள்ள முற்பட்டவள்; ஒன்பது மணியாகியும் அவள் வேலை முடியவில்லை. அப்பால் ஐந்து நிமிஷம் கழித்து, அன்னப் பறவையோ என மெல்ல அய்யரின் பக்கமாக வந்தாள் மனோரஞ்சிதம். அய்யர் நாசித் துவாரங்களில், "ஜம்" மென்று மனோரஞ்சித 'எஸ்ஸென்ஸ்'ஸின் வாசனை ஏறியது. இருக்காத்தைப் பிடித்து, தன் துடையின்

குருக்கள்:—என்ன, நஷ்டம் 2 ரூபாயா?

அய்யர்:—என் செய்வது? அடுத்த முறை கந்தன் கிருபையால் ஜயம் வரும்.

குருக்கள்:—நீங்கள் காலை விபூதி வாங்காமல் போனபோதே....................

அய்யர்:—ஓம் சிவசுப்ரமண்யம், ஓம் சிவசுப்ரமண்யம், ஓர் சிவசுப்ர..................

....

[வெளியேறுகிறார்].

மேல் அமர்த்திக் கொண்டார். அந்த க்ஷணமே தன்னை மறந்து விட்டார். அப்புறம் என்ன வைராக்கியமோ செய்தார்; அவற்றை யெல்லாம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமா?

மறு கணம் அய்யர், "கனிரசமே! காதற்கிளியே! என் இன்சுவையே! தெள்ளமுதே! மண்ணுலகிலுள்ள மாதர்களுக் கெல்லாம் அரசி நீயல்லவா!..............................."

"போதும் நிறுத்துங்கள்! நீங்கள் படித்த நாவல்களை யெல்லாம் நானும் படித்திருக்கிறேன்!"

"என்னன்பே! கோபித்துக் கொண்டாயோ?"

"அட மடி சஞ்சியே! இது ஒரு காதல் விளையாட்டு; இது தெரியாதா?"

"அப்படி சொல்லடி என் கண்ணு; நீ மடி சஞ்சி என்றது "என் மன்னவா?" என்று சொன்னது போலல்லவா இருக்குது!"..........................

"விஷயத்தைச் சீக்கிரம் சொல்லித் தொலையுங களேன்! பிறகு உமக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் அளப்பீர்கள்!"

"நாளை தினம் நமக்கு ஒரு குதூகலமான நாள். என் மனைவி எங்கோ போகின்றாளாம்!........................

"அதற்கு?"

"என்ன! நீ நாளை இரண்டு மணிக்கு, என் வீட்டுக்கு வந்து விட வேண்டியது. எம் பெண்ணு வெளியே இருப்பா, ஒரு வார்த்தை சொல்லி யனுப்பிட்டா நான் வந்து அழைச் சுண்டு போறேன். சிறிது நேரம் அங்கு இருந்து விட்டு, மாலை ரிக்ஷா ஒன்று அமர்த்திக் கொண்டு, டாக்கிசுக்குச் செல்லலாம்! என்ன ஊம்........ ....ஒரு முத்தம் கொடேன்!"

* * *

மறு நாள் கிட்டு வய்யரின் மனைவி ஏதோ உடம்பு சௌகரியத்தை முன்னிட்டு, சிந்தாதிரிப் பேட்டைக்குச் செல்லவில்லை. அய்யர் கோர்ட்டிலிருந்து ஒரு மணிக்கு வீடு வந்து சேர்ந்தார். வருத்தத்துடன் தமது உடைகளைக் களைந்து விட்டு, உணவருந்தி, நாற்காலியில் அமர்ந்தார். அவர் மகள் பரிமளம் தன் அப்பாவிடம் விரைந்து வந்து, "அப்பா மனோரஞ்சிதம்................"என்று ஆரம்பிக்கும் போதே, தன் கைகளால் அவள் வாயைப் பொத்தி, பேசாமலிருக்கும்படி ஊமைகள் பாஷையால் தெரிவித்தார்.

இதற்குள் உள்ளிருந்த அவரது மனைவி, "என்ன அது?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள்.

அய்யருக்கு வெல வெலத்துப் போய் விட்டது. இதற்கிடையில் பிராது கொடுக்க ஒருவன் வந்து விட்டான். அவனை அப்படியே அமரச் சொன்னார். இன்னும் கொஞ்ச நேரத்தில் பூகம்பம் ஏற்படுமோ என எண்ணினர்; மிகுந்த பீதியுடன் தம் மனைவியருகில் வந்து, "அவள் ஒரு நல்ல பெண்; யாரும் திக்கில்லை; என் ஆதரவில் தான் வைத்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சமயம்......................அவளிடம் உன் கோபத்தைக் காண்பிக்காது........... ....உன் தங்கை மாதிரி.......................... ...."

"போதும், போங்கள்! ஒரு குடும்ப ரக்ஷகரா யிருப்பவர்க்கு கூத்தியா வேறே வேண்டுமாக்கும்! இன்று தானே எனக்குத் தெரிந்தது! அவளை என்ன செய்யறேன் பாருங்கோ! மாப்பிள்ளை வாட்டமாயிருக்கவே தேவடியா, தேடி வந்துட்டாளாக்கும்!" என்று விரைந்து செல்ல எத்தனித்தாள். அய்யர் அவளைப் போக வொட்டாது, கையை இறுகப் பிடித்துக் கொண்டு, "இந்தச் சமயம் என்........... ...." என்று பேச ஆரம்பிப்பதற்குள், பிராது கொடுக்க வந்தவன், "ரொம்ப ஆபத்தான சமாச்சாரங்கோ!....................." என்று ஆரம்பித்தான்.

"போடா, போ! ஆபத்தும் பேத்தம்! வேலையற்றவனுங்க, இந் நேரத்

திலே வகதுட்டானுங்க ! வேறெங்காவது போய்ப் பாருங்கோடா !......................

"வேறெ எங்கேங்கோ; உங்கக் கிட்டத்தான் என்................................." அவனுக்கு தன் முஷ்டியைக் காட்டி, உடனே அய்யர் "போகிறாயா ? இல்லேயா ?" என்று கண்ணை உருட்டி, ஒரு முறைப்பு முறைத்தார். அவன் பிடித்தான் ஓட்டம். இந்த அமர்க்களத்துக்கிடையில் அய்யரின் மனைவி, "யாரடீ



அவள் ?" என்று கோபாவேசத்துடன், வெளியில் ஓடினாள். அய்யரும் கோட்டு, பூட்சு எல்லாம் அந்த அவசரத்தில் மாட்டிக் கொண்டு தம் மனைவி பின்னே விரைந்து சென்றார்.

"ஐயோ ! எவ்ளோ நோமா காத்துங் கடக்காதும்மா ! காலு எடத்துலே போனுதானேம்மா எதுனை வியாபாரம் நடக்கும் !" என்று முகவாய்க் கட்டையில் கைவைத்த வண்ணமாய், மனோஞ்சி தம் பூக் கூடைக்காரி சாவதானமாக அய்யரின் மனைவியைக் கேட்டாள்.

இப்பொழுது அய்யரைப் பார்க்க வேண்டுமே ? பரிமளம் மனோஞ்சிதம் மலர் வாங்கித் தாத்தான் தன்னை அழைத்தாள் என்று இப்பொழுது தான் தெரிய வந்தது. மறுகணம் அவர் அவசரத்தில் மாட்டிய கோட்டு, பூட்செல்லாம் மூலைக் கொன்றாய் பறந்தன. அவாது மனைவி, "தன் திருடு தன்னாலேயே வெளிப்பட்டதோ ?" என்று கூறிச் சிரித்தாள் !

அய்யரின் பலநாள் திருடும் வெளிப்பட்டுப் போச்சு ; பணம் வரும் பிராது போச்சு ; அமைதி நிறைந்த வீடும் அமக்கள வீடாச்சு ; இக்கதையும் இதோடு முடிந்துப் போச்சு !

"பலே! பயல் அகப்பட்டான்"

—:(0):—

(கே. ராஜகோபாலன், பி. ஏ.)

"சாமியோவ், சாமி, இந்தக் கணக்கைத் தீத்திடுவோம், வாங்க" என்று உரத்த குரலில் கூறினான் பலவேசம்.

இதுதான் இவன் ஏழாவது தடவை வீட்டிற்கு வந்து அழைத்தது. தன் பட்டியலைக் காண்பித்து அதன்படி தனக்குச் செல்லவேண்டிய தொகையைப் பெற்றுக்கொள்ளலா மென்ற நோக்கத்துடன் இரண்டு நாட்களுக்குள் ஆறுதரம் மாசாந்திரம்போல நடந்தான். சிவராமய்யரோ இதற்கு எளிதில் அகப்பட்டுக் கொள்வது? ஊருக்குப் புதியவராகையால் இவருக்கு மனிதரின் தன்மை அவ்வளவு துலக்கமாய்த் தோன்றவில்லை. ஆறு தடவைகள் தார்க்காட்டிப் பார்த்தார். எத்தனை தரம் தான் போக்கு நீக்குச் சொல்லலாம்? இத்தனைகாளாகத் தன் பட்டாவை தேடித் தேடிப் பார்த்தார். வீட்டிலுள்ள சட்டி பானைகள், ஓலைப் பெட்டிகள் பாக்கட்டைகள், துண்விளிப்புகள், மூலை முடுக்கு எல்லாம் சோதித்தாய் விட்டது. பட்டாவைக் காணோம். இவர் பட்டா இல்லாவிட்டால்தான் என்ன? கடைக்கான் பலவேசத்தினிடம்தான் இதற்குப் பிரதி ஒன்று இருக்கிறதே. அதை வைத்துத் தன் கணக்கைத் தீர்த்துக் கொள்ளலாகாதா? சிவராமய்யர் மனம் இதற்கு உடன்படவில்லை. "பலவேசம்பிள்ளை பலே கைக்காரன்" என்று ஊரார் சொல்வதைக்கேட்டிருந்தார். ஆகவே, கடைக்காரனை நம்பவும் இவர் துணியவில்லை. என்ன செய்வார் பாவம்! தானமாகத் தன்னிடம் கேட்டால் தயையோடு தருவார். தனக்கு வரவேண்டுமென்று வற்புறுத்தி வம்பு வழக்குப் பேசுபவர்களிடம் தன் வரும்படியைக் கொடுத்துவிட்டு விழிப்பாரா? இதை யெல்லாம் பற்பல தடவைகள் யோசனைப் பண்ணிப் பார்த்தார். கடைசியில் பலவேசத்தைச் சந்திப்பதென்று உறுதி செய்துகொண்டு வெளியில் வந்தார்.

"என்னடா, என்ன சங்கதி?"

"பட்டியல் கொண்கவந்திருக்கேன். கணக்கைப் பார்த்து எனக்குண்டானதைக் கொடுக்கணும். செலவுக்கு ரொம்ப முடையாக இருக்கு." என்று முடுக்காகப் பேசினான்.

"சரி, பார்த்து எவ்வளவு ஆகியிருக்கிறதென்று சொல்."

பலவேசம் பிள்ளை கணக்கைக் கூட்டிப் பார்த்தான். அரை நாழிகை கழித்த பிறகு "பத்தரை ரூபாய்க்கி ஒன்னேகால் துட்டுக் குறைய ஆச்சு" என்று கூறி முடித்தான்.

பலவேசம் பிள்ளையின் கடை ஒன்றுதான் ஊரில் உண்டு. ஒன்பதுமைல் தூரத்துள்ள வீரராகவ புரத்தில்தான் கடைக்குச் சாமான் வாங்கிவருவது இவன் வழக்கம். ஒன்றுக்குப் பாதிலாபம் பெறுவதில்தான் அவனுக்கு விருப்பம். அவனுக்குப் போட்டியாக ஒருவரும் கடைபோட முன்வரவில்லை. முன் அங்ஙனம் துணிந்த ஒருவனுடைய கதி அவர்களை வாட்டிற்று. ஆகவே, பலவேசம் தன் இஷ்டம்போல் வியாபாரம் செய்யத் தலைப்பட்டான். எவராவது அவசரமாக வந்து ஒரு சாமானைக்

கேட்டால் அவர் முகக் குறிப்பையுணர்ந்து அது இல்லை என்று கூறிவிடுவான். சாமான் வாங்க வந்தவர் ஆத்திரத்தின் மிகுதியால் அவனைக் கெஞ்சி மோசமான சரக்கைப் பெற்றுக்கொண்டு அதிக விலையும் அளித்து விட்டுச் செல்லுவார்.

தான் கொடுக்கவேண்டிய தொகையைக் கேட்டதும் சிவாமய்யருக்கு இடி விழுந்தது போலாயிற்று. இந்த இரண்டரை ரூபாய் அதிகத் தண்டத்திற்கு என்ன செய்வது? உண்மையைத் தன்னால் நிரூபிக்கவும் முடியாது. தன் சொந்தப் பட்டா இருந்தால்தானே சொல்லிக் காட்டலாம். அது அகப்படுவதற்கும் மார்க்கமில்லை யென்று தோன்றியது. அவர்தான் வீடு முழுவதும் கண்களில் எண்ணை விட்டுக் கொண்டு தேடிப் பார்த்தாய் விட்டதே. வீண் சச்சரவு போடவும் அவருக்கு வெறுப்பாயிருந்தது. சுடுசொல் கேட்கவும் இளப்பமா யிருந்தது. தன் அஜாக்கிரதைக்காக நொந்து கொண்டு மறுநாள் ரூபாய் தருவதாக வாக்களித்து விட்டு அவனை அனுப்பினர்.

அன்று முழுமையும் சிவாமய்யர் பட்டாவைப் பரிந்து தேடலானர். அதைக் கண்டாலொழிய அவர் மனம் நிம்மதியா யிராது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இரவு மணி ஒன்றரை யிருக்கும். அலமாரியில் தேடிக் கொண்டிருந்தார். பலகைக்கும் சுவருக்கும் நடுவிலுள்ள ஒரு ஓலையைப் பார்த்தார். ஆவலுடன் எடுத்தார். முகத்தின் துயரக்குறி மின்னல் வெட்டுப்போல் மாறியது. சந்தோஷத்தின் மிகுதியால் "பலே. பயல் அகப்பட்டான்" என்று ஒரு துள்ளுப் போட்டார். அந்த ஓலைதான் காணாமற் போன பட்டா. ஆத்திரத்தோடு கணக்கைக் கூட்டிப்பார்த்தார். ரூ. 8-2-7 தான் கடைக்குச் செல்லவேண்டியது. உடனே ஓடிக் கடைக்காரனிடம் கணக்கைக் காண்பிக்க வேண்டுமென்ற ஆவல் அவரைத் தூண்டியது. நடுநிசியில் அவனைக் காண்பது எப்படி? மறுநாள் பேசிக்கொள்ளலா

மென்று மனதைச் சமாதானப் படுத்திக் கட்டிலில் படுத்தார். சந்தோஷம் தூக்கத்தைத் தூரத்திவிட்டது. கண்களை மூடிக்கொண்டு மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றிக் காட்சியளிக்கச் சயனித்திருந்தார்.

மறுநாட்காலை பலவேசம் பிள்ளை வந்ததும் சிவராமய்யர் அவன் பட்டியலை எடுத்துக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார். பலவேசத்திற்கு ஆச்சரியமா யிருந்தது.

"எதுக்கு சாமீ, சேத்துத்தான் கணக்கெல்லாம் பாத்து தீர்ச்சாச்சே" என்றான்.

"அதெல்லாம் இருக்கட்டும் நீ போய் எடுத்துவா" என்று உத்திரவிட்டார் சிவராமய்யர்.

பலவேசம் பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை. பட்டா தான் தொலைந்து விட்டதாக சொல்லி யிருந்தாரே. சிவராமய்யர் இவ்வாறு உத்திரவிட்டதின் மர்மம் அவனுக்குத் துலங்கவில்லை. மனம் சஞ்சலமடைந்தது. கடைக்குச் சென்று பட்டியலை எடுத்துக்கொண்டு வந்தான். சிவராமய்யர் கையிலிருந்த பட்டாவைப் பார்த்ததும் அவனுக்குச் சப்த நாடியும் அசந்துவிட்டது. அந்தப் பட்டா தன் கைப்பட எழுதியது. அதில் பதியாமல் ஒரு தம்பிடிக்குக்கூட அவன் சாமான் கொடுக்கும் வழக்கமில்லை. இப்பொழுது தன் செய்கையெல்லாம் வெட்ட வெளிச்சமாகப் போகிறதே என்று பயந்தான். ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. பலவேசம் பிள்ளையில்லையா அவன்?

சிவராமய்யர் பட்டியலைச் சரிபார்க்க

எண்ணிப் பலவேசம் பிள்ளையைப் பட்டிய லைப் பார்த்துப் படிக்கச் சொன்னர்.

"தை மாதம் 20-ந்தேதி தேங்காய் இரண்டு, நல்லெண்ணெய் கால் படிக்கு அணு 6" என்று வாசித்தான்.

"வேறு ஏதேனும் பெருங்காயம் கிருங்காயம் வாங்கி யிருப்பீரு" என்று விரைவாகப் பதிலளித்தான்.

"22-ம்தேதி:— வெற்றிலை பாக்கு வகையரு இரண்டேகால்துட்டு" என்று வாசித்தான். அய்யர் பட்டாவில் ஒன்ற ரைத் துட்டுத்தான் எழுதியிருந்தது. பல வேசம்பிள்ளை சற்றும் தாமதியாது "நீங்க 2, 3 பழம் பிச்சுக்கிட்டுப் போயிருப் பீங்க" என்றுன்.

இப்படியாக ஒவ்வொருதாம் வாசிப் பதும் அதற்குச் சமாதானம் கூறுவது மாக விருந்தான் பலவேசம். சிவாராமய்ய ருக்கு இதெல்லாம் அசம்பாவிதமாக இருந்தது. சில விடங்களில் பட்டியலில் அரையணு, முக்காலணுவிற்குக் கணக்கு இருக்கும்; இவர் பட்டாவில் பதிந்தே யிராது.

இங்ஙனம் தன்னை ஏமாற்றியதைக் கண்ட சிவாராமய்யர் ஊரார் அவனைப் பற் றிக் கூறியதை நினைத்து அவர்கள் பேச் சைக் கேளாமல் கடன்வாங்க முற்பட்ட தற்கு வருந்தினர். உடனே சென்று பக் கத்து வீட்டாரை வரவழைத்தார். அவர் களும் வந்து வழக்கைக்கேட்டு சிவாராமய் யர் பட்டாவில் கண்டிருந்த தொகைதான் அவனுக்குச் சேரவேண்டிய தென்றும் அதிகப் பற்றுச் சொல்லியதற்காக அபரா தம் கட்டவேண்டுமென்றும் முடிவு செய் தார்கள்.

பலவேசமா இதற்கு உடன்படுவது? தன் கணக்கே நிஜமானதென்றும், தன் ஞல் வீண்கஷ்டம் அடைய முடியாதென் றும் கூறினுன். இனிமேல் தான் இப்ப டிக் கடன் கொடுக்க முடியாதென்றும் பகர்ந்து பயமுறுத்தினுன்.

பலபேர்கள் மத்தியில் ஒண்டியாக இருந்து தன் காரியத்தை எப்படிச் சமா ளிக்க முடியும்? சிவாராமய்யருக்கு இதில் நான்கு அணு லாபம். பலவேசத்தின் பாக்கியைத் தீர்த்து விட்டார். கடன் வாங்குவதில் ஒரு கௌரவம் பாவித்து வந்த சிவாராமய்யர் அன்று முதல் சல்லிக் குக் கூடக் கடனுகச் சாமான் வாங்குவ தில்லை என்று உறுதி செய்து கொண்டார்

அன்று பிரார்த்தித்துக் கொண்டபடி எங்களூர் "எலிமேல் ஏறிய யானைக்கு" ஒரு தேங்காய் விடல் எறிந்தார் என்று சொல்லவும் வேண்டுமோ?

எலிமேல் ஏறிய யானை=விநாயகர்.

அதிர்ஷ்ட-லாட்டரி!

(வா. சுப்பிரமணியம்.)

சாதாரணமாக காலணா கூடச் செலவு செய்ய மனம் வராத மனுஷன் அன்றைக்கு ஒரு தினசரியை வாங்கிக் கொண்டு தன் வீட்டை நோக்கி அதி வேகமாக வந்து கொண்டிருந்தார். வந்தவர் தன் இராப் போஜனத்தை முடித்து சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டு தினசரியை வாசிக்கலானார். அவரது ஸஹதர்மிணியான ருக்மணி அம்மாளும் வீட்டு வேலைகளைச் செவ்வனே முடித்து தன் பர்த்தாவின் அருகில் வந்து பேப்பரில் விசேஷம் ஏதேனும் உண்டோ என்று வினவினாள். அதற்கு அய்யர் "அன்னிக்கி அந்த ரங்கநாதஸ்வாமி லாட்டரி டிக்கட் ஒண்ணு வாங்கினேனோல்லியோ—அது சீட்டுக் குலுக்கி ஜெயுச்ச நம்பர் எல்லாத்தையும் பேப்பர்லே போட்டிருக்கு. நம்ப அதிர்ஷ்டம் எப்பிடி இருக்கு பார்க்கலாம்னு பேப்பர் வாங்கிண்டு வந்து பார்க்கறேன்—" என்றார்—அதற்கு ருக்மணி—"ஆமாம்—ஒங்க ஜாதக விசக்ஷண்யம் தான் தெரிஞ்சிருக்கே! இதுக்கு பேப்பர் வேறெ வாங்கி பார்க்கணுமாக்கும். இருந்தாலும் அந்த டிக்கட்டு என் பேர்லேன்னா போட்டிருக்கேன்னு சொன்னேள்! ஆமா—மா—நன்னாப் பாருங்கோ—ஒருக்கால் விழுந்தாலும் விழுந்திருக்கும்" என்று ஒரு போடு போட்டாள்.

"ஆமாம்—வரதங்கே! உன்னே கட்டிண்டுதலேயே தெரியல்லியா! என் அதிர்ஷ்டம் இருந்தாலும் இந்த வருஷத்துலே நம்பளுக்கு நல்ல காலம் வரப் போறதுன்னு அன்னிக்கி சொன்னானே அந்த ஊமை ஜோஸ்யன். அதையும் பார்த்துடலாமே! அதிருக்கட்டும். உள்ளே அந்த மொளகா வெங்கலப் பானேலே அந்த லாட்ரி டிக்கட்டை வச்சிருக்கேன். அத்தெ எடுத்துண்டு வாயேண்டி வாயேன்" என்றார்—சாமா அய்யர்.

ருக்மணி சரேலென்று கதவைத் திறந்து உள்ளே சென்று டிக்கட்டை

எடுத்துக் கொண்டு வந்து தன் கணவனிடம் கொடுத்தாள். அய்யரும் அம்மாளும் டிக்கட் நம்பரையும், பேப்பரில் வெளி

யான நம்பரையும் ஒத்திட்டுப் பார்க்கலானார்கள்-தெய்வவசத்தால் அந்த பேப்பரில் நான்காவது பக்கத்தில் இரண்டாம் பத்தியில் இரண்டாவது வரியில் இவர்கள் டிக்கட் நம்பர் 946 இருக்கக் கண்டார்கள்.... ....அய்யருக்கு அப்பொழுது கொஞ்சம் அருவருப்பாயிருந்த போதிலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், தன் பெண்ஜாதியைப்பார்த்து ஒரு கனைப்பு கனைத்து பேப்பரை அப்படியே கீழ எறிந்து விட்டு எழுந்து நடக்கலானார்........ ...."இப்பொ என்ன சொல்றே—நம்ப, நம்பர்தான் வந்துடுத்தேன்னே.... ....இரு............இரு............மொதல் ப்ரைஸ் என்ன 12,000 ரூபாயா"—அதற்குள் ஒரு கனை.

* *

"சுப்பாராயனுக்கு எவ்வளவு. 600 ரூபாய்; அத்தெ ஒழிச்சுடனும் மொதல்லே"—என்றார் அய்யர்.

"அதுக்குத்தான் ப்ராமிசரி நோட்டு கீட்டு ஒரு எழுவும் இல்லியே-அப்படியே சும்மா இருந்துட்டோம்னு தானே காலாவதியாயிடறது. இப்பொ பணம் வந்திருக்குன்னு அவனுக்கு 600 ரூ சொலையாக் குடுத்தடனுமாக்கும்" என்றாள் ருக்மிணி.

"எண்டி! போய்க் கேட்டோண்ணே 600ரூ தூக்கிக் கொடுத்தானே மனுஷன். அதுக்கு இது தான் ப்ரதியோ.... இதெல்லாம் முடியாது. அவனுக்குக் குடுத்துட்டு தான் மறு காரியம்..........."

"ஸரி! எப்படியாவது தொலையுங்கோ!" என்று ஸம்மதித்தாள் ருக்மிணியும்.

"எனக்கு ரொம்ப நாளா மாம்பலத்துலே வீடு ஒண்ணு ஸொந்தத்துலே கட்டிக்கணும்னு .... ஆசையாயிருக்கு. அதுக்கு ஏதாவது பணம் எடுத்து வைக்கணும்"........அதற்குள் ருக்மிணி எனக்கு ரொம்ப நாளா—இந்த மைசூர், பெங்களூர் இந்த ஊர்லெல்லாம் நவராத்திரி ரொம்ப அழகாயிருக்குன்னு சொல்றா! அத்தெ போய் பாக்கணும்னு ஆசையாயிருக்கு"-என்று அவனும் தன் ஆசையைத் தெரிவித்துக் கொண்டாள்.

இப்படியாக இருவர் மனதிலும்—மிக மிக அழகானதும், ருசியானதுமான அனேக எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றி மறைந்தன.—ஒவ்வொன்றையும் இருவரும் ஆராதித்து மெய் மறந்தனர். அப்படியே அன்றிரவும் கழியலாயிற்று. ஆனால் அய்யர் மனம் சாந்தமடையவே யில்லை....... அவருடைய மனதில் வேறொரு எண்ணமும் தோன்றி அவரை சஞ்சலப்படுத்தியது. அதாவது டிக்கட்டோ தன் பெண்ஜாதியின் பேரில் இருக்கிறது........ஒருக்கால் பணம் வந்தவுடன் எல்லாவற்றையும் தானே செலவு செய்ய வேண்டும் என்று அவள் சண்டை செய்தால் என்ன வென்பதே.

மறுநாட் காலையில் அய்யர் எழுந்து காலைக் கடன்களை முடித்து, சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ருக்மிணியை காப்பி முதலானவைகளைக் கொண்டுவரச் சொன்னார். அம்மாளும் என்றைக்குமில்லாத ஊக்கத்துடன் உபசரிக்கலானாள். அப்பொழுது தான் அய்யருக்கு, அவர் பெண்ஜாதியின் கிழிந்த புடவையும், அவள் முதுமையும், அகோரத் தோற்றமும் புலப்பட்டன. இந்த சனியனைக் கட்டிக் கொண்டு மாடிக்க வேண்டியிருக்கிறதே என்றும் சிந்திக்கலானார்............ஆயினும் என் செய்வது........ தன் மனோ வேதனையை அடக்கிக் கொண்டு, தன் உறவினர்கள் தான் கஷ்டப்படும் நாட்களில் தன்னை லட்சியம் செய்யாமலிருந்ததையும், தான் அவர்களை எப்படிப் பழி வாங்க வேண்டும் என்பதைப் பற்றியும் யோசனை செய்யலானார்.-யோசித்துக் கொண்டே எழுந்து கடைக்குச் சென்று காய்கறிகள் வாங்கி வீட்டுக்குத் திரும்பும் பொழுது ஒரு கணக்குப் புஸ்தகத்தையும் வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

ருக்மிணியும் வீட்டில் ஏகாந்த மாயிருக்கும் நேரத்தில், தான் இனிமேல் பக்கத்து வீடுகளில் எவ்வாற நடந்து கொள்ள வேண்டும் என்றும், தான் இனி அணியப் போகும் நகை, புடவை, துணி மணிகள் இவைகளைப் பற்றி மிகவும் பலமாக யோசிக்கலானுள்.....................அன்றைய சமையலுக்கு வீட்டில் போதிய அளவு உப்பில்லாமையால், பக்கத்து வீட்டில் ஒரு காண்டி உப்பு கடன் வாங்கிக் கொண்டு அம்மாள் திருப்பவும், வீட்டில் தன் கணவன் காய்கறிகளுடன் ஒரு கணக்கு புஸ்தகத்தை வாங்கி வந்திருப்பதைப் பார்த்துக் கொல்லெனச் சிரித்தாள். சிரித்த காரணம் வினவ, அவள், "ஒன்றமில்லே! இத்தனை நாளா சோத்துக்கே தாளம் போடற நமக்கு இன்னிக்கு திடீரென்று இந்த கணக்குப் புஸ்தகத்தைப் பார்த்ததும் தான்" என்றுள். அதற்கவர் "இன்னும் எவ்வளவு தான் அடிச்சுக்கிறது. இன்னுமே தான் நம்ப கையிலே பணம் எப்போதும் நடமாடப் போறதே- அத்தை கணக்கு வழக்கில்லாம செலவழிச் சிண்டிருக்தா மறுபடியும் லாட்ரி அடிக்க வேண்டியதுதான். அதுக் கெல்லாம் ஒரு கணக்கிருந்தா செலவு ரொம்ப ஜாஸ்தியா போச்சுன்னு மட்டுப் படுத்திப் பிடலாமோல்லியோ அதுக்குத் தான்" என்றார். ருக்மிணியும் ஒருவாறு சமாதான மடைந்தாள். அய்யர் தான் வாங்கிக் கொண்டுவந்த காய் கரிகளைக் கொடுத்துச் சமையல் ஏற்பாடுகளையும் சொல்லி கணக்குப் புஸ்தகத்தில் ஏதோ குறிப்பிடலானுர்...............அன்றைய பகல் போஜனம் முடிந்தது........முடிந்ததும், இருவரும் தங்கள் பிற்கால வாழ்வைப் பற்றி சிந்திக்கலானுர்கள்....................இருவர் மனதிலும் கணக்கற்ற ஏற்பாடுகளும், எண்ணங்களும் திரும்பவும் தோன்றி மறையலாயின. சாயங்கால வேளை வந்தவுடன் அய்யர் எழுந்து சற்று உலாவிவா வெளியேறினுர்—அம்மாளும் தனக்கு ஏகாந்தமாக கோட்டை கட்ட வசதி ஏற்பட்டதைப் பற்றியும் சந்தோஷப் பட்டாள்...............

வெளியிற் சென்ற அய்யருக்கு மனம் நிம்மதியாகவே இல்லை..........தன் பெண்சாதி கையில் பணம் வந்தவுடன் அவள், அவளுடைய அண்ணன் தம்பி, மற்றுமுள்ள சுற்றத்தாருடன் உறவு கொண்டாட ஆரம்பித்து எப்பொழுதும் தன் வீட்டிலேயே அவர்களை வைத்து போஷித்து வந்த பணத்தை விரயம்

செய்து விடுவாள் என்றும், தான் திரும்பவும் தன் பெண்ஜாமின் நிமித்தம் அவர்களைப் பார்க்க வேண்டியிருப்பதைக் குறித்தும் மிகவும் அருவருப்பு மேலிட்டவராய் வீட்டிற்குத் திரும்பினுர்.

வீட்டில் ருக்மிணியும், பணம் தனக்

குக் கிடைக்கும் என்னும் ஸந்தோஷம் ஒரு புறமிருக்க, அதைத் தன்னிஷ்டப்படி செலவு செய்ய விடாது தன்னை தடுக்கப் போகும் தன் கணவன் மீது மிகவும் ஆத்திரம் கொண்டாள்.

அய்யர் வீடு வந்து சேர்ந்ததும் தன் பெண்ஜாதி மிகவும் கோபமடைந்திருப்பதைப் பார்த்தார். பெண்ஜாதியின் முகத்தைப் பார்த்தவுடன் தன்னைப் பார்க்கும் பார்வை அவளுக்கு அகம்பாவம் தலைக்கேறி யிருப்பதாக அவருக்குத் தோன்றிற்று. ருக்மிணிக்கும் தன் அகமுடையான் தன்னிடத்தில் அருமை கொண்டவனை விட்டான் என்று அவர் தன்னைப் பார்க்கும் பார்வையில் புலப்பட்டது. இருவரும் ஒருவரை யொருவர் வெறுத்து நோக்கிய பின் ஒன்றும் பேசாமல் மௌனம் சாதித்தனர்.

சிறிது நேரம் சென்றவுடன் அய்யர் மிகவும் ஆத்திர மடைந்தவராய், "இந்தா அந்த பேப்பரைக் கொண்டுவா! நம்ப பேருக்குத்தான் விழுந்திருந்தா-நாளைக்கு காலமேயே பணம் வாங்கிண்டு வர ஏற்பாடு செய்யணும்" என்றார்.

ருக்மிணி அந்த டிக்கட்டையும் பேப்பரையும் எடுத்துக் கொண்டு வந்து எறிந்தாள். அய்யர் பேப்பரையும் டிக்கட்டையும் சிறிது நேரம் ஒத்திட்டுப் பார்த்தவுடன் அவர் முகம் திடீரென மாறியது. அய்யரது ஆத்திரமும், அருமையையும், ஆசையும் மறைந்தன—ஒன்றும் தோன்றாமல் திகைத்தார். ருக்மிணி திகிலடைந்தவளாய் என்ன வென்று வினவ அய்யர் மிகவும் சாந்தமாக "டிக்கட்டு நம்பர் எல்லா எழவும் சரியாதானிருக்கு............... ஆனா..........புக்.......நம்பர்....,....வேறேயான்னடி இருக்கு!"

சாரணச்சிறுவன்:—ஏதேது! இது ஒன்றும் நடக்கிற காரியமாயில்லை! வேறெதுவாயினும்தான் நல்ல காரியம் இன்று செய்யவேண்டும்!

பார்வதி - பரமேசுவரன்

(கண்ணடி.)

I

ஓர் குக்கிராமம். அங்கே அம்பலவாண முதலியார் என்ற ஒரு தனவந்தர். அவருக்குப் பார்வதி என்ற ஓர் அழகிய சிறுமி. பார்வதிக்கு அப்போது வயது பதினொன்றே யானாலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சுந்தரவதனியாய் விளங்கினாள். இனிய தேனையும் நறுமணத்தையும் உடைய மலரை தேனீக்கள் சுற்றிச் சுற்றி மொய்ப்பதுபோல் பார்வதியைச் சுற்றித் திரிந்த இளைஞர்களில் பரமேசுவரனும் ஒருவன்.

பரமேசுவரன் பரம ஏழை. முதலியாரவர்களுடைய இல்லத்தில் இலவசச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு பக்கத்து நகரத்திலுள்ள ஹைஸ்கூலில் வாசித்து வந்தான். அவனுக்கு இலக்ஷ்மி தேவியின் கடாக்ஷந்தான் பூஜ்யமே தவிர சரஸ்வதிதேவி மட்டும் அவன் நாவில் குடிகொண்டிருந்தாள். அவன் பேசும்போது அவன் வார்த்தையின் அழகும் அவன் குரலோசையும் கேட்கக் கேட்கப் பிரம்மானந்தமாயிருக்கும். சங்கீதத்தில் இயற்கை ஞானம். பள்ளிக்கூடத்திலும் அவன்தான் வகுப்பில் புலி. சகல கிராமவாசிகளும் ஏன் இவனிடத்தில் உயிராய் இருக்க மாட்டார்கள்! அப்படி இவனிடத்தில் அதிக ப்ரேமை வைத்திருந்தவர்களில் பார்வதிக்குத் தான் முதன்மை ஸ்தானம் அளிக்கவேண்டும். அவனும் அவளிடத்தில் ஒரு அடிமையாகவே கிடந்தான். நகரத்திற்கு தினமும் இரட்டைமாட்டு வண்டியில் சென்று பார்வதி ஏழாவது வகுப்பில் படித்து வந்தமையால் பரமேசுவரன் அதே வண்டியில் அவளுடன் தினமும் போய்வரும் பாக்கியம் பெற்றிருந்தான். பரமேசுவரன் பாடம் சொல்லிக்

கொடுப்பதா யிருந்தால் பார்வதிக்குப் பாடம் திகட்டுவதே கிடையாது!

II

"பார்வதி–பரமேசுவரன், பார்வதி–பரமேசுவரன்" என்று இரண்டுதரம் இரட்டை இரட்டையாக மேற்படி நாமங்களை உச்சரித்தார் அம்பலவாண முதலியார். சிறிது நேரம் மௌனமாயிருந்தார். அப்பொழுது அவரது மனதில் அனேக காட்சிகள் தோன்றி மறைந்தன. "சேச்சே! என் செல்வக்கிளியைக் கொண்டுபோய் இந்த அன்னவாட்சைப் பயலுக்கா! சேச்சே! இதற்கு இடங் கொடுக்கக்கூடாது" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டு எழுந்தார் ஆசனத்தை விட்டு பரமேசுவரனிடத்தில் எல்லோரையும்போல் இவருக்கும் ப்ரீதியும் இரக்கமும் உண்டென்றாலும், அவன் தன் பெண்ணுக்குகந்தவனா என்று நினைக்கும் போது அவனுடைய வறுமையானது முன் தோன்றி அவன்பால் அவர் மனதில் ஒரு வெறுப்பையும் உண்டாக்கி விட்டது. ஆனதால் பார்வதியை அதிகமாய் பையனிடம் நெருங்க விடாமல் கண்காணிப்பதில் முதலியார்வாளுக்கு அதிகக் குறி.

மேற்சொன்னபடி ஆசனத்தை விட்டு எழுந்த முதலியார் நேரே பார்வதியின் அறைக்குச் சென்று சந்தடி செய்யாமல் கதவண்டையில் நின்றார். அப்போது இரவு மணி 8 இருக்கும். பரமேசுவரன் பார்வதிக்குப் பாடம் சொல்லித் தரும் வேளை. ஆனால் பாடமும் நடக்கவில்லை; ஓடமும் நடக்கவில்லை. பரமேசுவரனுக்கு வலது கண் ஓரமாய் ஒரு காயமிருந்தது. அதற்கு பஞ்சு வைத்து பாண்டேஜ் (bandage) போட்டுக்கொண்டிருந்தாள் பார்வதி. அவள் கண்களில் முத்துபோல் இரண்டு துளி கண்ணீர் தோன்றி கன்னங்களின் வழியாய் மெதுவாய் வழிந்து கொண்டிருந்ததை முதலியார்வாள் டேபிள் லாம்பு வெளிச்சத்தில் நன்றாய் பார்த்தார். அவரது ஹிருதயம் ஒரு நிமிஷநேரம் ஓடாமல் நின்றுவிட்டது. சிறிதுநேரம் அப்படியே அசைவற்று நின்று கொண்டிருந்தார். பார்வதியின் கண்ணீரைக் கண்டதும் அவருடைய கண்களிலும் நீர் ததும்பி விட்டது. அதற்குமேல் அவரால் பொறுக்க முடியவில்லை. கோபம் பொங்கியெழுந்தது. ஒரே பாய்ச்சலில் சிறுவர்களிடம் சென்றார். அவரைக்கண்டதும் பரமேசுவரன் பயந்துபோய் விலகி நின்றான். ஆனால் பார்வதியோ அஞ்சவில்லை. (அவளது துயரத்தில் பயம் தெரியவில்லை போலும்!)

கோபாவேசமாய்ப் போன முதலியார் கிஞ்சிற்றும் இரக்கமின்றி பரமேசுவரனின் தலைமயிரைப் பிடித்து வெளியே இழுத்துக்கொண்டு போய்விட்டு 'சீ நாயே! இனி என் வீட்டு வாசல்படி வந்து ஏறாதே; ஓடிப்போ, துரோகிப்பயலே" என்று வாயில் வந்தபடியெல்லாம் திட்டினார். பார்வதி இதைப் பார்த்துக்கொண்டு சும்மாவா இருந்து விட்டாள்? இல்லை. இந்தக் கோரக்காட்சியைப் பார்த்ததும் முதலில் அவள் திடுக்கிட்டு விட்டாலும் மறுவிநாடி எல்லா விஷயத்தையும் அறிந்துகொண்டு, "அப்பா, அப்பா, இது என்ன வேலை; எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்?" என்று அலறி அழுதுகொண்டு தன் தந்தையின் கையைப் பலமாகப் பிடித்திழுத்து பரமேசுவரனின் தலைச்சிகையை விடுவிக்க முயன்றாள். அது தான் வீணாகி விட்டதே. பிறகு தன்னறைக்குள் சென்று குப்புறப் படுத்து செறுமிச் செறுமி அழுது கொண்டிருந்தாள்.

இந்த சம்பவத்தைப்பற்றி அதிக அலம்பல் பண்ணி விடக்கூடாது என்று பயம் முதலியாருக்கு உண்டு. ஆகையால் சிறிதுநேரம் ஓய்வு எடுத்துத் தன் மனதை சமாதானப்படுத்திக்கொண்டு தன் குழந்தையின் அறைக்குச் சென்று அவளைத் தூக்கி உட்கார வைத்து உபசரித்து நயமாய் பேச ஆரம்பித்தார்.

"ஏனம்மா, என்னிடம் நிஜத்தைச் சொல்லி விடுவியோ இல்லையோ!" என்றார்.

"நான் ஏன் பொய் சொல்லவேண்டும்?" என்ற பதில் பளீரென்று வந்தது. ஆனால் இன்னும் அழுதுகொண்டேதானிருந்தாள் அவள்.

"அந்த அநாதைப் பயலுக்கு நீதான் டாக்டர் வேலை பார்க்க வேண்டுமோ?" என்று முதலியார் கொஞ்சம் கோபத்தைக் காண்பித்தார்.

"இல்லை அப்பா. அந்தக் காயம் என்னாலேதானே அவருக்கு ஏற்பட்டது. நான்தானே அவரை மரத்தில் ஏறி மாங்காய் பறிக்கச் சொன்னேன். அய்யோ அப்பாடா! எவ்வளவு பெரிய காயம்! அதுவும் கண் ஓரத்தில்! இன்னும் கொஞ்சம் தவறினால் ஒரு கண்ணே போய்விடுமே அவருக்கு!" என்று சொல்லி மேலும் அழ ஆரம்பித்தாள் பார்வதி. பார்த்தார் முதலியார் சிந்தித்து. காரியம் எல்லாவிதத்திலும் மிஞ்சிப் போய்விட்டது என்று கண்டார்.

"அம்மா, என் கண்ணே, நீ போய் அழாமல் படுத்துக்கொள். நான் காலையில் அவனை அழைத்துக்கொண்டு வந்து விடுகிறேன்" என்று குழந்தைக்கு இனிய மொழி பகர்ந்துவிட்டுப் படுக்கப் போய்விட்டார். அன்றிரவு அவர் தூங்கவேயில்லை. தீர விசாரிக்காமல் பரமேசுவரனுக்கு அவர் செய்த பிழையை எண்ணி எண்ணி வருந்தினார். எப்படியாவது அவனைக் கண்டு பிடித்துக்கொண்டு வந்து பார்வதியை அவனுக்குப் பாணிக்கிரகணம் செய்து வைத்துவிட வேண்டுமென்றுகூட உறுதி பண்ணிக்கொண்டார்.

மனிதன் எண்ணப்படி எந்தக் காரியம் சித்திக்கும்? பரமேசுவரன் அகப்படவேயில்லை. அவனைக் கண்டவர் யாருமில்லை.

"ரோஷத்தினால் அவன் ஆற்றிலே குளத்திலே விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டிருப்பான்" என்பது ஊர் வதந்தி.

III

காலச்சக்கரம் சுழன்றது. பனிரெண்டு வருஷம் பறந்து சென்றது. கோபுரம் தாழ்ந்தது குப்பை உயர்ந்தது.

அதே கிராமத்தில் ஓர் குடிசையில் ஓர் ஏழை விதவையும் அவளது ஏக குமாரத்தியும் பரிதாபகரமான நிலையில் கஷ்ட ஜீவனம் செய்து வந்தார்கள். பெண்ணுக்கு ஸ்ரீ மகாமாரியம்மன் போட்ட முத்துகளால் முகம் முழுவதும் விகாரப்பட்டு இரண்டு நேத்திரங்களும் உபயோகமில்லாமல் போயிருந்தன. அவள் தனது கை பரிச உணர்ச்சியைக்கொண்டே மிக சாதுர்யமாய் செய்யும் நூல் பின்னல் வேலையைக் கொண்டுதான் ஜீவனம்.

இணையற்ற வனப்புடன் விளங்கிய பார்வதிக்கு இக் கெதி வந்தவாறு என்ன? என்று நீங்கள் கேட்கலாம். அதுதான் ஊழ்வினைப் பயன். பரமேசுவரன் மறைந்து இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கொடுமையான வைசூரி பூட்டியது. பார்வதிக்கு அது அவளது சுந்தரவதனத்தைக் கெடுத்து இரண்டு கண்களையும் பிடுங்கிக் கொண்டு போய்விட்டது. இந்த சம்பவத்திலிருந்தே அம்பலவாண முதலியாருக்கு சறுகு காலம் வந்தது. பெண்ணுக்கு ஏற்பட்ட கதியை எண்ணி எண்ணி தினமும் கொஞ்சமாக அவர் உடல் மெலிய ஆரம்பித்து விட்டது. அதோடு விட்டதா காலக்கொடுமை? அவர் அதிக விலை கொடுத்து நிலம் வாங்கி சேர்த்த காலத்தில் கொஞ்சம் கடன் இருந்தது. இப்போது செல்விலை இறங்கிவிட்டதின் பயனாய் நிலத்தின் விலையும் ஒன்றுக்கு காலாக வீழ்ந்து விட்டது. அவருடைய கடன், கூடுதலான வட்டிக் கடுமையால் அநேக மடங்குப் பெருகிவிட்டது. எனவே முதலியார்வாளுடைய நிலம் வீடு வாசல் முதலிய சகல சொத்தும் கடன்காரருக்குப் போய்விட்டபோதிலும் இன்னும் கடன் முழுவதும் அடைபடவில்லை. இந்த ஏக்கம் வந்து கூடியதும் முதலியார் தாங்கமாட்டாமல் உயிர் நீத்தார். பார்வதியின் கதி அதோகதியாய் முடிந்தது.

"அற்ற குளத்து அருநீர் பறவை போல்" உற்றார் உறவினரெல்லாம் அவளை

கிராகரித்து விட்டனர். சுமார் 10 வருஷங்களுக்கு முன் பார்வதி பஞ்சவர்ண கிளிபோல் இருந்ததையும் சீருடனும் சிறப்புடனும் அவள் வளர்ந்ததையும் இப்போது சீர்குலைந்து ஜீவனத்திற்கே கஷ்டப்படும் தன்மையையும் நினைத்துப் பார்த்து பார்வதியின் தாயார் சதா கண்ணீர் வடித்த வண்ணம் அவர்களுடைய காலம் ஓடிக்கொண்டிருந்தது.

IV

ஓர்நாள் மாலை வேளையில் அந்தக் குக்கிராமத்திற்கு ஓர் புது மோட்டார் வந்தது. துரையைப்போல் கால்சட்டை தொப்பி முதலான உடுப்புகள் போட்ட ஓர் மனிதர் அதை ஓட்டிக்கொண்டு வந்தார். மோட்டார் நேரே பார்வதியின் குடிசையின் வாசலில் போய் நின்றது. அந்த மனிதர் சடக்கென்று இறங்கி வேகமாய் குடிசைக்குள் நுழைந்தார்.

"பார்வதி" என்று ஒரு இனிமையான சங்கீதத்தொனி அவர் வாயினின்றும் புறப்பட்டது. பார்வதி மட்டும் அப்போது குடிசையில் தனிமையா யிருந்தாள். இந்தத் தொனி அவள் செவியில் பட்டதும் அவளுக்குப் புளகாங்கிதம் உண்டாகியது. ஓர்வித இன்பம் தெரிந்தது. அந்தக் குரலை தான் எப்போதோ அதிகமாய் விரும்பி யிருந்ததாக அவள் அறிந்தாள். "ஆ! வந்து விட்டீர்களா!" என்று அலறி எழுந்தாள். ஆனல் உடனே மூர்ச்சையாகி பொத்தென்று விழுந்தாள். பரமேசுவரன் (வந்த மனிதன் பரமேசுவரனே) பாய்ந்து அவளைத் தன் கைகளில் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

சிறிது நேரத்தில் வெளியே சென்றிருந்த பார்வதியின் தாயார் வாசலில் மோட்டாரும் ஜனக் கூட்டமும் இருப்பதைப் பார்த்து உள்ளே சென்றபோது தன் மகள் சட்டையும் தொப்பியும் போட்ட ஒரு புது மனிதன் மடியில் மூர்ச்சித்துக் கிடப்பதையும் அம்மனிதன் பார்வையற்ற அவளது கோர முகத்தைப் பார்த்த வண்ணம் மாலை மாலையாய் கண்ணீர் வடிப்பதையுங் கண்டாள். உடனே அவள் கோ வென்று புலம்ப ஆரம்பித்து விட்டாள். இதற்குள் பார்வதியும் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். தன் ஆசை நீர பரமேசுவரனை கைகளினல் தடவிப் பார்த்துக் கொண்டாள். அவள் துக்ககரமான



தனது விருத்தாந்தங்களைத் தெரிவித்தாள். முதலிலேயே பரமேசுவரன் வெளியில் அவர்களைப்பற்றி விசாரித்துக் கொண்டு தான் வந்திருந்தான் என்பதை அவன் தெரிவித்துக் கொண்டான்.

பிறகு, தான் அவ்வூரை விட்டு சுமார் 12 வருஷங்களுக்கு முன் போனவன் நேரே பம்பாய்க்குப் போனதாகவும் அங்கே ஒரு பார்சி கனவானின் உதவியால் நன்ருய் வாசித்து கண் வைத்தியத்தில் தேர்ச்சிபெற ஜெர்மெனிக்குப் போயிருந்ததாகவும் அங்கே வெற்றியடைந்து திரும்பி இந்தியாவுக்கு வந்து இப்போது பம்பாயிலே மிக முக்கியமான ஓர் ஆஸ்பத்திரியில் கண் வைத்தியத்தில் ஸ்பெஷலிஸ்டாக மாதம் ஆயிரத்து இரு நூறு ரூபாய் சம்பளத்தில் இருப்பதாகவும் தெரிவித்தான்.

இதைக் கவனமாய் கேட்டுக்கொண்டிருந்த பார்வதி "உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று கேட்டாள்.

"பார்வதி! உன்னை வந்து பார்த்த பிறகுதான் நான் கல்யாண விஷயத்தைப்

பற்றி நினைப்பது என்று உறுதி கொண்டிருந்தேன். இப்போது உன்னைப் பார்த்து விட்டேன். இனி அதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும்" என்று பதில் சொன்னான் பரமேசுவரன்.

"ஆம், நீங்கள் எப்படியும் வந்துவிடுவீர்கள் என்றுதான் எதிர் பார்த்தேன். இல்லாவிட்டால் என் உயிர் எப்பொழுதே போயிருக்கும் தெரியுமா?" என்றாள் பார்வதி.

V

பம்பாய் ஆஸ்பத்திரியில் டாக்டர் பரமேசுவரன் முதலில் செய்த கண் ஆபரேஷன் மிக வெற்றிகாமாய் முடிந்தது. அந்த "பேஷன்ட்" யார் தெரியுமா? அவள் தான் மிஸஸ் பரமேசுவரன்—பூர்வப் பெயர் பார்வதியம்மாள். மிஸஸ் பரமேசுவரனுக்கு இரண்டு கண்களும் பூரண சுகம் அடைந்து விட்டன. முகத்தில்மட்டும் கொஞ்சம் அம்மை வடுக்கள் இருந்தன. அதை டாக்டர் பரமேசுவரன் பெரிதுபடுத்தவில்லை. ஏனென்றால் அவர் முகத்தின் லக்ஷணத்தை விரும்புகிறவர் அல்ல. அகத்தின் லக்ஷணமே பிரதானம் என்ற கொள்கையை யுடையவர்.

நீங்கள் மாதம் 1-க்கு ரூ. 15 முதல் ரூ. 150 வரையில் சுலபமாக சம்பாதிக்க வேண்டுமா?

பிரசண்ட விகடனை மாத மிருமுறை வெளியீடு) சுமார் 400 ஏஜண்டுகள் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களில் விற்று வருகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மாதம் 1-க்கு ரூபாய் 15 முதல் 150 வரையில் கமிஷனாகவும் சம்பளமாகவும் பெற்று வருகிறார்கள். சிரமப்பட்டு விற்பவர்களுக்கு நல்ல லாபம். விபரமான ஏஜன்ஸி ரூல்ஸுக்கு எங்கள் காரியாலயத்திற்கு இன்றே எழுதுங்கள். கீழ்க்கண்ட இடங்களுக்கு அவசரமாக ஏஜண்டுகள் தேவை.

1. கடலூர்	15. அம்மாப்பேட்டை	29. திருச்செந்தூர்
2. சிதம்பரம்	16. தரங்கம்பாடி	30. ராஜப்பாளையம்
3. விருத்தாசலம்	17. நன்னிலம்	31. சங்கரநாயினர்கோயில்
4. மதுராந்தகம்	18. ராமநாதபுரம்	32. மானாமதுரை
5. திண்டிவனம்	19. விருதுநகர்	33. கிருஷ்ணகிரி
6. திருக்கோயிலூர்	20. ராமேஸ்வரம்	34. திருப்பத்தூர்
7. தஞ்சாவூர்	21. திருவனந்தபுரம்	35. திருப்பூர்
8. வேதாரண்யம்	22. மணப்பாரை	36. ஆத்தூர்
9. நீடாமங்கலம்	23. கொடைக்கானல்	37. சின்ன சேலம்
10. மன்னார்குடி	24. பரமக்குடி	38. கூனூர்
11. சீகாழி	25. திருமங்கலம்	39. திருச்சூர்
12. திருவிடைமருதூர்	26. அம்பாசமுத்திரம்	40. திண்டுக்கல்
13. பேரளம்	27. ஸ்ரீவைகுண்டம்	
14. முத்துப்பேட்டை	28. ஆறுமுகனேரி	

மானேஜர், பிரசண்ட விகடன் ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.

யுத்த தேவதையின் முன்னறிவிப்பு



யுத்த நிகழ்ச்சிகளைப்பற்றி யுத்ததேவதை சித்திரம் எழுதிக் காட்டுகிறது. சிறிய யுத்தமாக மதிக்கக்கூடிய இத்தலி–அபிஸீனியப் போர் குறிப்பிடப்பட்டது. இனி அடுத்தது ஐரோப்பியப் பெரும்போர். அதற்கடுத்தது உலக மகாயுத்தம். அவைகளைக் குறிக்கப் பெரிய தூரியக்கோல் (Brush)களைப் பக்கத்தில் வைத்திருப்பது காண்க.



உருவப்படத் திறப்புவிழா

("தா. ரா. கு".)

அபிஸீனிய சக்ரவர்த்தி கறுப்பு மனிதரா, வெள்ளையரா, அவர் தாடி இயற்கையா, செயற்கையா? 75 மணி நேரம் இடை விடாது ஜலத்திலிருந்து நீந்திய நிபுணர் யார்? நாள் ஒன்றுக்கு 400 சுருட்டுகளை அதமாக்கும் அசுர ஆசாமி எப்பேர்க்கொத்தவர்? புகை ஏற ஏற உயரக் கிளம்பி விடுவாரோ? சென்ற 120 வருடங்களாய்ச் சாகாதிருந்து இன்னும் திடமாயிருக்கும் மனிதரெப்படி? அவர் என்ன (மருந்து) சாப்பிடுகிறார்? நான்கு நாள் ஓயாது ஆகாய விமான மோட்டி தன்னந் தனியாய் முன் பின்னறியா அயல்நாடு சேர்ந்த பெண்ணணங்கைக் கண்டதுண்டா? இத்தகைய ஆச்சரியச் செய்திகளை வெளியிட்டு ஏராள பணச் செலவிட்டு ரேடியோ மூலமாவது அன்னாரின் படங்களைப் பிரசுரித்தும் நமக்கு அரையணாச் செலவில் அறிவிக்கும் பத்திரிகைகளின் தொண்டு தான் என்னே! இப்படிப் பட்டவர்களின் படங்களைக் குறித்து நான் எழுதத் தயாராக இல்லை.

* * *

நான் சந்தோஷப் படுவதெல்லாம் ஆங்காங்கு அடிக்கடி நடந்தேறும் கீழ்க் குறிப்பிட்ட எண்ணிறந்த பெரியார்களின் திரு உருவப் படத்திறப்பு விழாக்களைக் குறித்தே. முக்கியமாய் (1) ஜில்லா, தாலூகா போர்டுகள் தலைவர்கள், உபதலைவர்கள் (மாஜி பேர் வழிகள் உட்பட,) (2) எலக்ஷன்களில் வெற்றி பெற்ற மகான்கள் மதி மந்திரிகள், (3) கமிட்டிகளில் உழைப்பவர்கள் (4) சீர்மைக்குச் சர்க்கார் செலவில் அடிக்கடி அவசரக் காரிய நிமித்தம் சிரமத்தைப் பாராட்டாது வேடிக்கையாய் போகும் பிரதிநிதிகள். மேற் கூறிய அன்பர்கள் உருவப் படங்கள் தான் பெரும்பாலானவை என்பதையும், ஸ்தலஸ்தாபன சுய ஆட்சி இலாகாவில் மட்டுமன்றி இதர இலாக்காக்களிலும் இது பரவி, பெரியார்கள் உதயமாகிக் கொண்டி

ருக்கின்றனர் என்பதையும் நான் கணக்காதாரங்களுடன் கண்டு பிடித்திருக்கிறேன்.

* * *

இந்திய மாதாவின் அதிருஷ்டத்தைப் பாருங்கள்! எவ்வளவு பெரியார்கள் தோன்றி படத்திறப்பு விழாக்கள் நடக்கின்றன. சுய மரியாதை, சுய ஆட்சி, சகோதரத்துவம், சமத்துவம் முதலியவற்றிற்காகப் போராடும் இந் நாட்டில் என் சம அந்தஸ்துள்ள ஒவ்வொருவரும் பெரியாராக மாறி தங்கள் உருவப் படத்திறப்பு விழாவுக்குச் சம்மதிப்பதில் என்ன ஆச்சரியம்!

ஆனால் இப் படங்களில் பெரும்பான்மை பள்ளிக் கூடங்களிலும், லோகல் போர்டுகள் கட்டிடங்களிலும், கமிட்டி ஆபீஸ்களிலும், ஒரு சிலரே கண்டு களிக்கும் படிக்கும், பொது பாமர ஜனங்கள் சௌகரியமாய்க் கண்டு பார்க்க முடியாதபடி, அநியாயமாய் அடைபட்டுக் கிடக்கின்றன.

மேனாடுகளில் சித்திர வேலைப்பாடமைந்த படங்களையும், உருவப்படங்களையும் ஒருங்கு சேர்த்து ஒரு சித்திர காட்சி சாலையில் (Portrait Gallery) வைப்பது வழக்கம். அதைப் பின் பற்றி நாமும் நம் பெரியார்களின் படங்களை ஒன்று சேர்த்து ஒரு காட்சி ஏற்படுத்தி பாமர ஜனங்கள் கண்டு களிக்குமாறு செய்ய ஒருவரும் முன் வாராதது ஓர் குறைதான்.

* * *

[மானிட வர்க்கமே பிரமித்து, இவர்கள் "அவதார புருஷர்கள்" என்று முடிவான தீர்மானத்திற்கு வருமாறு அவரவர் துறையில் உலக முழுவதும் மார்க்கத்தைப் போதிக்கும் கவிசிரேஷ்டர் பாரதியார், ஷேக்ஸ்பியர், ஞானிகள் பரமஹம்ஸர், விவேகாநந்தர், மதஸ்தாபகர்கள் கிறிஸ்து, புத்தர், முகம்மது; தியாகி, தேசபக்தர்; எளிய வாழ்க்கையைப் போதிக்கும் காந்தி, முதலிய வாழ்க்கையின் லட்சியங்களாய்ப் பார்த்துப் பின் பற்றக் கூடிய உத்தமர்களின் படங்களன்றோ, பள்ளிக் கூடங்களிலும் பொதுக் கட்டிடங்களிலும் திறந்து வைக்கப் படுதல் வேண்டும்.]

அவ்வாறின்றி, எலக்ஷன்களில் பணத்தை வாரி வீசி வோட்டர்களின் அஞ்ஞான ஆதாரமாய் வெற்றி பெற்ற சிங்கங்களின் படங்களும், ராஜீய கட்சிப் பிரதி கட்சி தலைவர்களின் படங்களும் சம்பளம் வாங்கி தங்கள் கடமையை ஒழுங்கே செய்ய வேண்டிய உத்தியோகஸ்தர்களின் படங்களும், பிரபுக்களின் படங்களும், திறக்கப்படுவதில் என்ன அர்த்தம் உண்டு? "சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்" என்றபடி இவ் வர்த்தமற்ற படங்களும் "உலகம் பொய்" என்னும் தத்துவத்தை நன்கு விளக்கிக் காட்டவும் இல்லையென்று சொல்ல முடியும்?

("இரஸிகன்.")

நமது தமிழ்ப் பேசும் படங்கள் பெரும்பாலும், நம் தமிழ் மொழி சிறிது மறியாத பிறாலேயே 'டைரக்ட்' செய்யப்பட்டு வருகிறது. இதனுல் அப்படங்களில் எத்தனையோ விதமான குற்றங்குறைகள் நிறைந்திருக்கின்றன. இதனுலேயே, தமிழ்மொழி தெரிந்தவர்கள் அல்லது தமிழைத் தாய்மொழியாக உடையவர்கள் தமிழ்ப்படங்களை 'டைரக்ட்' செய்ய வேண்டுமென்று நாம் அடிக்கடி சொல்லி வருகிறேம். ஏனென்ருல், அவர்களுக்குத்தான் படங்கள் தயாரிப்பதற்காகப் பொறுக்கி யெடுக்கப்படும் கதைகளின் போக்கும், நட்பமும் இனிது விளங்கும்.

சில காலமாக, நம் தமிழர்களிலும் சிலர் பட டைரக்டர்களாக முன் வந்திருக்கிருர்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஸ்ரீமான்கள் ராஜா சாண்டோ, கே. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., ஏ. நாராயணன் முதலியோராவர்.

நம் நாட்டில் பிறந்த ஸ்ரீமான் ராஜா சாண்டோவை நாம் பம்பாய் மாகாணத்துக்குக் கடன் கொடுத்து விட்டோம் நமது நாட்டுப் போதிஞர்களையும், நிபுணர்களையும் நாம் சரியாகக் கௌரவிக்காமையால்—கவனிக்காமையால்—அவர்கள் தங்களை வரவேற்று கௌரவிக்கும் இடத்துக்குப் போய்விடுகிருர்கள். இது சகஜமே. அது போலவே, ஸ்ரீமான் ராஜாசாண்டோவின் அதிவாற்றல்களை நாம் உணராமல் அலட்சியஞ் செய்து வந்தமையால், அவர் பம்பாய்க்குப் போய்விட்டார். அவர் பம்பாயிலுள்ள பிரபல ஸ்டுடியோக்களில் முக்கிய பாத்திரங்களை யெடுத்து நடித்தும், சில படங்களைத் தாமே டைரக்ட் செய்தும் பேரும் புகழும் பெற்று வருகிருர். அவர் இப்போது பம்பாய் ரஞ்சித் ஸ்டுடியோவில், சிறந்த நடிகராகவும், டைரக்டராகவும் இருந்து வருகிருர். அவர் வெளி மாகாணத்தி லிருந்தாலும், தாய் நாட்டாருக்குச் சமயம் நேர்ந்தபோது உதவி செய்யத் தயங்குவதில்லை. சென்னை மாகாணத்தில் முதன் முதலாக ஸ்டுடியோ ஏற்படுவதற்கு மூலகாரணமா யிருந்தவர் ஸ்ரீமான் ராஜா சாண்டோவே யாகும். இப்போது சென்னையில் ஸ்டுடியோக்கள் அதிகரித்தும், அபிவிருத்தி யடைந்தும் வருகிற தென்ருல், அப்பெருமை அவரையே சாரும்.

தமிழ்நாட்டில் பெரும் புகழ்பெற்ற "மேனகா" தமிழ்ப்படம் அவர் டைரக்ட் செய்ததே யாகும். அப் படத்தைக் கொண்டே ஸ்ரீமான் ராஜா சாண்டோவின் டைரக்ஷன் திறமையும், ஸினிமா கலையில் அவருக்குள்ள ஞானமும் நன்கு விளங்கும். "வசந்தசேனை" என்னும் மற்ருெரு தமிழ்ப்படம் இப்போது அவர் டைரக்ஷனில் நடைபெற்று வருகிறது. அதுவும் நல்ல முறையில் வெளிவரும் என்று நிச்சயமாக நம்பலாம்.

சமீபத்தில் ஸ்ரீமான் ராஜா சாண்டோ சென்னைக்கு வந்து சென்றபோது

நடந்த வரவேற்புக் கூட்டத்தில்; ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எம். எல். ஏ., கூறியது போல், அவரை எப்படியாயினும் பம்பாயி லிருந்து நம் நாட்டுக்கு அழைத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு நமது தமிழ்ப்பட முதலாளிக ளிடத்தில் இருக்கிறது. அவ்வாறு அவர் இங்கேயே வந்து விட்டால், அவர் டைரக்ஷனில் தமிழ்ப்படங்கள் தயாராக ஆரம்பித்தால், வருங்காலத்தில், தமிழ்ப்படங்கள், மற்ற வங்காளி, ஹிந்தி, உருது படங்களைவிட உன்னத நிலையை யடைந்து விடும். அதனால் நமது பட முதலாளிகளுக்கு நல்ல லாபமும், புகழும் கிடைக்கும் என்பது நிச்சயம்.

வடநாட்டு சினிமா நடிகை
ஸ்ரீமதி. வீணாதேவி.

அடுத்தபடியாக, ஸ்ரீமான் கே. சுப்பிரமணியம் தமது டைரக்ஷனால் தமிழ்ப் படங்களுக்கு ஒருவித உயர்வையும், மதிப்பையும் அளித்து வருகிறார். அவர் ஒரு படத்தை டைரக்ட் செய்கிறாரென்றால், அதில் ஒரு விசேஷம், புதுமை இல்லாமலிராது. அவர் பழைமையில் புதுமையைப் புகுத்துவதில் வெகு சமர்த்தர். மக்கள் மனங்களை எவ்வகையில் கவர்ச்சி செய்விக்க முடியும் என்னும் விஷயங்களை அறிந்து கையாளுவதில் நுட்பமதியும், பேராற்றலும் வாய்ந்தவர். அவரது டைரக்ஷன்' திறமையை நாம் முதன் முதலாக 'நவீன சாரங்கதாரா"வில் பார்த்து மகிழ்ந்தோம். அடுத்தபடியாக, "நவீன சதாரத்தை"யும் "உஷா கல்யாணத்"தையும் தயாரித்துக் காட்டினர். ஆனால், அவ்விரு படங்களிலும் கதாநாயகப் பாத்திரத்துக்கு—அதிலும் ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலட்சுமிக்குத் தகுந்த ஜோடியாக—சரியான ஆளைத் தேடிப்போடாமையால், அப்படங்கள் அவ்வளவாக வெற்றி பெறாமல் போய்விட்டன.

"பக்த குசேலா"

இப்போது ஸ்ரீமான் சுப்பிரமணியம் நமக்கு "பக்த குசேலா"வை யளித்திருக்கிறார். இப் படம் சகல அம்சங்களிலும் சிறந்து விளங்குமாறு செய்வதில் அவர் மிகவும் ஊக்கம் எடுத்துக் கொண்டிருக்கிறார். நடிகர் தேர்வு, கதை யமைப்பு, நடிப்பு, பாட்டு, சம்பாஷணை ஆகிய விஷயங்களில் அவர் காட்டியுள்ள திறமை அவருக்குச் சினிமாக் கலையில் உள்ள சிறந்த புலமையை வெளிப்படுத்துகிறது.

நடிகர் தேர்வு

உதாரணமாக, ஸ்ரீ கிருஷ்ணனாகவும், குசேலர் மனைவியாகவும் முறையே நடிக்கும் ஸ்ரீமதி. எஸ். டி. சுப்புலட்சுமியின் முகச்சாயலும், பாலகிருஷ்ணனாகவும், குசேலர் மகளாகவும் முறையே நடிக்கும் சிறுமி பாலசரஸ்வதியின் முகச்சாயலும் ஒத்திருப்பதை ஊன்றி நோக்குபவர்களுக்கு, பாலசரஸ்வதி ஸ்ரீமதி சுப்புலட்சுமி

யின் தங்கையா யிருக்குமோ என்ற சந்தேகம் எழாமல் இருக்காது. அதுபோலவே, குசேலர் வேடம் பூண்ட பாபநாசம் சிவனுக்கும், பால குசேலனாக நடிக்கும் சிறுமி நீலாம்பாளுக்கும் முகவொற்றுமை யிருப்பது கவனிக்கத்தக்கது. இந்நுணுக்கத்தை நாம் பெரும்பாலும் மேனாட்டும் படங்களில் கண்டு வந்திருக்கிறோமே யொழிய, இந்திய படங்களில் காண்பது மிக அரிது. அவ்வகையில் ஸ்ரீமான் சுப்ரமணியத்தின் முயற்சியைப் பாராட்டாதிருக்க முடியாது.

முனிவராக நடிக்கும் மணிபாகவதருக்கும், ருக்மணி, பாமாவாக முறையே நடிக்கும் ஸ்ரீமதிகள் கே. கே. பார்வதி, பூர்ணிமா தேவி ஆகியவருக்கும், மற்றும் சில்லரை வேடந்தரித்த வித்வான் சங்கரலிங்கம், ஜாலி கிட்டு முதலியவர்களுக்கும் வேடப் பொருத்தம் நன்றாக அமைந்திருக்கிறது.

கதை யமைப்பு

குசேலர் கதை வறுமையை (தரித்திரத்தை)ச் சித்திரித்துக்காட்டும் ஒரு கதையாகும். சுதாமா என்ற பெயருடைய பிராம்மணர் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவோடு இளமையில் ஒரு ஆசிரியரிடத்தில் கல்வி கற்றவர். அவரது அத்தியந்த நண்பர்; ஆயினும், அவரைத் தமது வழிபடு தெய்வமாகக் கொண்டவர். சுதாமா லௌகிகத்தில் சிறிதும் சிந்தையைச் செலுத்தாது, பாரமார்த்திக வழியிலேயே பெரிதும் சென்று கொண்டிருந்தமையால் வறுமையால் பீடிக்கப்பட்டார். சுசீலை என்னும் பெண்மணி அவருக்கு பத்தினியாக வாய்ந்தாள். கணவன் குறிப்பறிந்து அவர் மனங்கோணாது நடந்து வந்தாள். இவர்களுக்குப் புத்திர சம்பத்து குறைவின்றி யிருந்தது. அதிகமில்லை 27 பிள்ளைகள்தான். இவ்வளவு பெரிய குடும்பத்தை வைத்துக்கொண்டு வெறும் உஞ்ஜவிருத்தியில் வரும் அரிசியைக்கொண்டு எவ்வளவுநாள்தான் காலந் தள்ள முடியும்? பிள்ளைகளின் பாதவிப்பைப் பார்க்கச் சகியாமல் சுசீலை தனது கணவனை அவரது நண்பரான கிருஷ்ணனிடம் அனுப்பி வைக்கிறாள். ஸ்ரீகிருஷ்ணன் சுதாமாவை வரவேற்று ராஜோபசாரஞ்செய்கிறார். சுதாமா கந்தைத்துணியில் முடிந்து வந்திருந்த அவலை ஒரு பிடி எடுத்து உண்டு அவருக்குச் சகல ஐசுவரியங்களும் வரச் செய்கிறார். தம் ஊராகிய அவந்தியை யடைந்த

சினிமா அழகி ஸ்ரீமதி. தேவபாலா.

சுதாமா தமது வீடு முதலியவை பெருமாறுதலடைந்திருப்பதைக் கண்டு பிரமித்து எல்லாம் கிருஷ்ணனால் வந்த செல்வம் என்று மகிழ்ந்து அவனை வாழ்த்துகிறார். இவர் மிகவும் வறுமையால் வாடியிருந்ததால்தான் இவருக்குக் குசேலர் என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது.

இவ்வித சரித்திரக் கதையைச் சினிமாவில் படமாகக் கொண்டு வந்து வெற்றி பெறச் செய்வதென்றால், அது அவ்வளவு எளிதன்று. அவ்வகையில், இக்கதையைச் சினிமாவுக் கேற்ற முறையில்

நவீனமாக்கி, சிறப்பாகத் தயாரித்த ஸ்ரீமான் சுப்பிரமணியத்துக்கே பெருமை உரியதாகும்.

நடிப்பும் பாட்டும்

தென்னிந்திய சங்கீத உலகில் மிகப் பிரசித்திபெற்ற பாபநாசம்சிவம் இப்படத்தில் குசேலராக வேடம் பூண்டிருக்கிறார். இவருக்கு வேடப் பொருத்தம் நன்கு அமைந்திருக்கிறது. குசேலராக வேடந் தரிப்பவருக்கு நடிப்பு அவ்வளவு அவசியமில்லையென்றாலும், உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டிய சில கட்டங்களிலும் நடிப்பை வெளிப்படுத்தா திருப்பது ஆபாசமாகும். நாம் பாபநாசம் சிவத்தினிடம் நடிப்பைச் சிறிதும் எதிர்பார்க்கவே முடியாது. வேறெங்கு இல்லாவிடினும், சுசீலை பலநாள் பட்டினியால் மயங்கி விழுமிடத்தில் மகள் தாய் நிலையை இவரிடம் விவரிக்குங் கட்டத்திலும், பிள்ளைகளின் பரிதாப நிலையைச் சொல்லி ஸ்ரீ கிருஷ்ணனிடம் போய் வருமாறு விநயமாக வேண்டுமிடத்திலும், ஸ்ரீகிருஷ்ணனால் தம் வீடுவாசலெல்லாம் மாடமாளிகைகளாகவும், தம் மனைவி மக்களெல்லாம் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போலவுங் காணப்படுவதைக் கண்டு பிரமிக்குங் கட்டத்திலும் ஸ்ரீமான் பாபநாசம் சிவம் தம் உணர்ச்சியை வெளிப்படுத்தவாவது முயன்றிருக்கலாம். அவர் எச்சமயத்திலும் பாப்பிரம்மம்போலவே மாறுதலின்றிக் காணப்படுகிறார்.

துவாரகைக்குச் சென்று ஸ்ரீ கிருஷ்ணனைக் காண அரண்மனைக்குள் நுழையுஞ் சமயத்தில் காவற்காரர்களால் தடுக்கப்பட்டு பாதவிக்குமிடத்தில் மட்டும் ஸ்ரீமான் சிவம் உருக்கமாகப் பாடி மூர்ச்சிப்பது யாவர் மனதையுங் கரையச் செய்யுமென்பதில் ஐயமில்லை.

ஸ்ரீமான் சிவம் சங்கீத உலகில் வெகுவாகப் புகழப்படுகிறார். சங்கீத சம்பந்தமான நூல்களை இயற்றியிருப்பதாகவுங் கேள்வி. தமிழ்ப் படங்கள் சிலவற்றிற்குப் பாட்டுகள் பாடிக் கொடுத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அவர் சங்கீத கச்சேரிகளில் பாடியதை கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததில்லை. ஆகவே, இப்படத்தில் பாடியிருப்பதற்கும், சங்கீத கச்சேரிகளில் பாடுவதற்கும் உள்ள வித்தியாசத்தை என்னால் காணமுடியாது. ஆனால், ஒன்றுமட்டும் நான் கூறமுடியும். இப்படத்தின் ஆரம்பத்தில் அவர் பாடிய பாடல்கள் சிறிதும் எடுபடவேயில்லை. இவர் பாடியவைகளை மைக்கிராபோன் சரியாகக் கிரகிக்கவில்லையோ அல்லது இவரது தொண்டைதான் சரியாக இல்லையோ என்னமோ! எனக்குக் காரணஞ் சொல்லத் தெரியவில்லை. கடைசியாக அவர் பாடிய இரண்டு மூன்று பாடல்களில் அவரது சங்கீத வித்வத்வம் நன்கு புலப்படுகிறது.

ஸ்ரீமதி சுப்புலட்சுமி இதுவரை நாலைந்து படங்களிலேயே நடித்தாலும், தமிழ்ப் பட உலகில், மற்ற மங்கையர் அடையாத பெரும்புகழை இவர் வெகு சீக்கிரத்தில் அடைந்துவிட்டார். அவரது ஒப்பற்ற நடிப்பும், இனிய பாடலும், அழகிய தோற்றமும், சாரீர சம்பத்துமே இதற்குக் காரணமாகும். அவர் இதில் குசேலர் மனைவி சுசீலையாகவும், ஸ்ரீகிருஷ்ணனாகவும் நடிக்கிறார் இதிலிருந்து அவர் எவ் வேடம் பூண்டாலும் திறமையாக நடிக்கக் கூடியவர் என்பதை நன்கு புலப்படுத்தி விட்டார். இதுவரை ராணியாகவும், ராஜகுமாரியாகவும் நடித்து வந்த இவர், சாதாரண ஏழை பிராமண மாதாகவும் வேடம் பூண்டு அப் பாத்திரத்திற்கேற்ப திறமையாக நடித்திருப்பதை யாரும் புகழாதிருக்க முடியாது. சுசீலை தன் மக்களுடைய பசியைப் போக்குவதற்காக அடுத்தகத்துக்குப் போய் அரை படியரிசி கடன் கேட்டுக் கெஞ்சுவதும், பலநாள் பட்டினியைத் தாங்காது மூர்ச்சிப்பதும் ஆகிய இடங்களில் ஸ்ரீமதி சுப்புலட்சுமி திறமையாக நடித்து பார்ப்பவரைக் கண் கலங்க வைக்கிறார். கடைசியாக, ஸ்ரீ கிருஷ்ணனால் குபேர சம்பத்தையடைந்ததும், குசேலர் துவாரகையிலிருந்து திரும்பி வருகிறார் எனக் கேள்விப்

தயாராகிவிட்டது!

?

ஓரியண்டல்ஸ்

நளாயினி

(மகத்தான புராண புண்ணிய சரிதை.)

கீழ்க்கண்ட ஊர்களில்
வரும் நன்னாளை
எதிர்பாருங்கள்!!

மதராஸ் - -
மதுரை - -
திருச்சி - -
கோவை - -
கும்பகோணம் -
திருவாரூர் - -
ஊர்கம் - -
புதுக்கோட்டை -
வேலூர் - -

வித்வான்-சி. எஸ். செல்வரத்னம் - -
மிஸ்டர் பி. எஸ். கோவிந்தராஜ் - -
,, ஏ. கே. வரதராஜன் - -
விதூஷகன்-O. கருப்பையா - -
நடிகரத்னம்-மிஸ். சி. என். நீலாவதி -
மிஸ். பி. எஸ். கிருஷ்ணமணி - -
,, டி. பி. லக்ஷ்மிகாந்தம் - -
முதலியோர் நடித்தது.

வசந்த ராவ், ஏ. பெயின்டர் டைரக்ட் செய்தது.

கோலாப்பூர் தயாரிப்பு.

விவரங்களுக்கு,

ஓரியண்டல் சௌண்ட் பிக்சர்ஸ்,
லிமிடெட், திருப்பூர்.

பட்டு சுசிலை உள்ளிருந்து ஓடி வந்து வரவேற்கும் கட்டத்தில் ஸ்ரீமதி சுப்புலட்சுமி நடிப்பின் சிகரத்தை யெட்டிப் பார்க்கிறாரென்றே சொல்ல வேண்டும். ஆனால், அவரது வயதும், தோற்றமும், 'இவர் 27 மக்களுக்குத் தாயாக எவ்வாறு இருக்க முடியும்?' என்ற சந்தேகத்தைக் கிளப்பாமலிராது.

ஸ்ரீமதி சுப்புலட்சுமியின் வசீகர வதனத்துக்கு ஸ்ரீ கிருஷ்ணன் வேஷம் வெகு பொருத்தமாக அமைந்து இருக்கிறது. அவரது மோகன சிரிப்பு யாவரையும் மயங்கச் செய்து விடுகிறது. பெண்ணியற்கையை விட்டு ஆண்களுக்குரிய பெருமித நடை நடப்பதும், கம்பீரமாகப் பேசுவதும் அவர் நடிப்பின் தத்துவத்தை யுணர்ந்து நடிப்பதற்குச் சிறந்த அத்தாட்சியாகும். ஆனால், அவரது மெல்லிய இனிய குரல் இவர் பெண்ணென்பதை வெளிப்படுத்தி விடுகிறது. அவர் பாடும் பாடல்கள் கர்ணாமிர்தமா யிருக்கின்றன.

சினிமாவில் ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட வேடங்களைப் பூண்பதும், ஆண் பெண் வேடந் தரிப்பதும், பெண் ஆண் வேடம் போடுவதும் ஒழுங்கன்று; அசம்பாவிதமுமாகும். இருந்தாலும், ஸ்ரீமதி சுப்புலட்சுமி கிருஷ்ணன் வேடம் பூண்டது கூடுமானவரை பொருத்தமாகவே இருப்பதால், விவகாரத்துக்கு அதிக இடமில்லை யென்பது எனது நம்பிக்கை.

பால சரஸ்வதியின் நடிப்பைப் பற்றியும், பேச்சைப் பற்றியும் எவ்வாறு புகழ்வது என்று எனக்குத் தோன்றவில்லை. ஹாலிவுட் குழந்தை நடிகை ஷெர்லி டெம்பிளுக்கோ, வடநாட்டுச் சிறுமி வசந்திக்கோ, பால சரஸ்வதி எவ்வகையிலும் சளைத்தவளல்லள் என்பது எனது திடமான நம்பிக்கை. இச் சிறுமி பால கிருஷ்ணனாக நடிக்கும் போது கிருஷ்ணனுக்குரிய விஷமச் செயல், குறும்புச் சிரிப்பு, சுறு சுறுப்பு முதலியவைகளை வெளிப்படுத்தி நடிப்பதும், குசேலர் மகளாக வரும்போது அப் பாத்திரத்திற் கேற்ப சமயோசிதமாக நடிப்பதும் பாராட்டத்தக்கது. நடிகர்கள் பேசுகையில் தங்களுக்குக் கொடுத்த பாடத்தை அப்படியே உருப்போட்டு சமய சந்தர்ப்பந் தெரியாது கிடு கிடு வெனக் கூறுவதும், அல்லது ஒவ்வொரு வார்த்தையாகக் கூறுவதும் பெரிய நடிகர்களிடத்திலும் வழக்கமா யிருப்பதை நாம் பல படங்களில் கண்டு வருகிறோம். ஆனால் இக் குழந்தை நடிகை தான் பேசுவதை அர்த்தஞ் செய்து கொண்டு மெய்ப் பாட்டோடு பேசுகிறது. முதலில், குசேலரிடம் தங்கள் பரிதாப நிலையையும், பக்கத்து வீட்டுப் பையன்கள் இருக்கும் உன்னத நிலையையும் குசேலாக வேடந்தரித்த பால சரஸ்வதி கூறிக் கொண்டே வந்து அழுகையில் பார்ப்பவர்களும் கண்ணீர் விடுவார்கள் என்பது நிச்சயம்.

ஸ்ரீமதி பார்வதியும், ஸ்ரீமதி பூர்ணிமாதேவியும் தாங்கள் எடுத்துக் கொண்ட பாத்திரங்களுக்கு ஏற்ப ஆபாசத்துக்கிடமின்றி நடிக்கின்றனர். ஸ்ரீமதி பூர்ணிமா பாடும் பாடல் கேட்கத்தக்கனவே.

மணி பாகவதர், ஜாலி கிட்டு, வித்வான் சங்கரலிங்கம் குஞ்சிதபாதம் பிள்ளை முதலியவர்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட பாத்திரங்களுக் கேற்ப, கூடுமான வரையில் நடித்திருக்கின்றனர். இப் படத்தில் குஞ்சிதபாதம் பிள்ளையின் ஸ்தூல தேகமே ஹாஸ்யத்தை விளைவித்து விடுகிறது. ஜாலி கிட்டு விதவையின் கோலத்தில் வந்து நம்மைச் சிரிக்க வைக்கிறார்.

இப் படத்தில் பாட்டும் சம்பாஷணையும் கூடுமானவரை நன்றாக இயற்றப் பட்டிருக்கின்றன. காட்சி ஜோடிப்பும் இயற்கைக் காட்சியும் நன்றாக அமைக்கப் பட்டிருக்கின்றன.

படப்பதிவும், ஒலிப்பதிவும் நன்றாக எடுக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்கள் இடைச்சியாக மாறுவதும், பாலகிருஷ்ணன் குழந்தையாகவும் குழந்தை முயல்களாகவும் மாறுவதும், பால கிருஷ்ணன் காடியாக மாறுவதும் ஆகிய

ஜாலக் காட்சிகள் திறமையாகப் படமெடுக்கப் பட்டிருக்கின்றன. குசேலரைத் துவாரகையின் காவற்காரர்கள் அடிக்கும்போது உலகமே அதிர்ந்தாடுவதாகப் படமெடுக்கப் பட்டிருப்பது காமிரா மென்னின் சாமர்த்தியத்தைக் காட்டுகிறது.

குசேலரை வரவேற்று அழைத்துச் செல்லப்படும் ஊர்வலத்திலும், அவருக்கு அபிஷேகம், ஆராதனை செய்யுமிடத்திலும் வாத்தியங்கள் வாசிப்பது காதுக்குக் கேட்கிறதேயொழிய, மேள வாத்தியக்காரர்கள் காணப்படவில்லை. கிராமபோன் பிளேட்டை இவ்விடத்தில் இணைத்திருப்பதாகத் தெரிகிறது. குசேலர் வீட்டில் சிறுமி விளக்கை யவித்து விட்டேன் எனச் சொல்கிறாள். ஆனால் வெளிச்சம் இருக்கிறது. போன்று சில குற்றங் குறைகள் நீக்கப்பட்டால் இது முதல்தரமான படமென்பதில் தடையில்லை.

சென்னையை நோக்கி விரைந்தோடி வரும்
"மெட்ராஸ் மெயிலி"ல்
ஒரு காட்சி.

இப்படத்தில் மற்றொரு விசேஷமென்ன வென்றால் பம்பாயில் பிரசித்தி பெற்ற நடனமாதான ஸ்ரீமதி அஜூரி, பரசுராமர் ராஜ சபையில் நடனஞ் செய்வதாகும். அஜூரியின் நடனம் பார்க்கத்தக்க சிறந்த காட்சியாகும்.

பூக்கடைக்கு விளம்பரம் வேண்டுமா?

தமிழ்நாட்டு மக்களால் ஏராளமான வோட்டுகள்
கொடுக்கப்பெற்று, தமிழ்நாட்டு நடிகர்களுள்
—: முதன்மை ஸ்தானம் வகித்த :—

கலை மன்னர் **M. K. தியாகராஜ பாகவதர்**

நடிக்கும்

சமூகப் படம்.

சத்தியசீலன்

அமெரிக்க நாட்டின் அரிய நடிப்பைப்
பின்பற்றி அபாரமாய் நடிக்கிறார்
கதா நாயகன் சத்தியசீலன்!

வடநாட்டு கோஹரை மனதில் நினைத்துக்கொண்டு அரிய நடிப்புடன் காட்டில்
வாழும் இன்னிசைக் குயில்களுடன் போட்டியிட்டுப் பாடுகிறார் கதாநாயகி

M. S. தேவசேனா

டைரக்டர் :- B. சம்பத் குமார்.

தயாராகும் இடம் :—

வாடியா மூவிடோன், பம்பாய்.

For Booking Apply to:—

Thyagaraja Talkie Film Co.,
TRICHY.